சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 41-ம் இலக்கம்

# பாப்பரசரின் புனிதஉடல் முப்பேழைகளிலே பூச்சியமாக அடக்கஞ்செய்யப்படலாயிற்று

பாப்பரசர் 12-ம்பத்திநாதரின் புனிதஉடலானது கத்தோலிக்க திருச்சபையின் சம்பிரதாய முறைப்படி சகலவிதஆடம்பர வைபவங்களோடும் சென்ற 13-ந் திகதியன்று சம்பிரமாகப் பூமதானஞ் செய்யப்படலாயிற்று. ஆலயமணிகள் துக்கநாதஞ்செய்ய ஆரம்பமாகி நான்குமணிநேரம் நடைபெற்ற மனவருட்சிக்குரிய மகத்தான அடக்கத்திருச்சடங்கானது அர்ச். பேதுருவானவரின் மகாதேவாலயத்திலே அவர்கல்லறையில் முடிவடையலாயிற்று. இருமருங்கும் பிரமாண்டமான 24மெழுகுவர்த்திகள் நிறுத்தப்பட்டு எரிந்துகொண்டிருக்க, அவற்றின்பக்கமாய்எதிர்முகமாக நோபிள்காவலரும், சுவிஸ்காவலரும் விழிப்பாய் நின்றுகொண்டிருக்க, ஆலயத்தின் நடுவிடமாய்ப் பெரியபலிபீடத்தின் முன்பாகப் பாப்பரசரின் புனிதஉடல் பூச்சியமாக வளர்த்தப்பட்டிருந்தது.

## அந்திமதிருச்சடங்குகளின் ஆரம்பம்

தமதுஆளுகையின் 19ஆண்டுகளிலும் பாப்பரசரால் பேட்டியருளப்பெற்றிருந்த பலலட்சக்கணக்கான கத்தோலிக்கமக்கள் 'ரெலிவிஷன்'மூலமும், வத்திக்கான் வானொலிமூலமும் அந்திம திருச்சடங்குகளை அவதானித்துக் கொண்டிருந்தார்கள். அவரது உடலின் பின்புறமாகப் பாடகர் குழாம்மண்டபத்தின் கிழக்குஅந்தத்திலுள்ள அரைவட்டமான விசிராமத்திலே கறுப்புவஸ்திரங்களால் அலங்கரிக்கப்பெற்றிருந்த உயர்மேடைகளில் பரிசுத்தஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற 50நாடுகளின் ஸ்தானிகர்கள்முதலாம் இராசியப்பிரதிநிதிகளும், பாப்பரசரது சகோதரரின் புதல்வர்களான கார்லோ பச்செல்லி, குயிலியோ பச்செல்லி, மார்க் கற்ரோனியோ பச்செல்லி இளவரசர்கள்மூவரும், விதவையான அவரின்சகோதரியும், மறுசுற்றத்தவர்களும் அமர்ந்திருந்தார்கள்.

## புனிதஉடலின் ஆலயஊர்வலம்

பாப்பரசரின் சிங்காசனத்தைச் சுமந்துசெல்லப் பரம்பரையாக உரிமைபூண்ட பதினறுபேர் உயர்ந்தஆசந்தியிலிருந்து அவர் உடலை மெதுவாகத்தூக்கிச் சிவிகைஒன்றின்மீது தோள்களில் வைத்து முன்சொன்ன அரைவட்டமான விசிராமத்தைநோக்கிச் சுமந்துசென்றுர்கள். ரேமைப் பிரபுத்துவகுடும்பங்களைச்சேர்ந்த நோபிள்காவலர் குதிரைவால் போல் இறங்கும் அழகியஇறகுகளுடன்கூடியவெள்ளித்தலைக்கவசங்களுடன் அதன் பக்கமாகப் பவனிசென்றனர். இவர்களைத் தவிர, நீல-மஞ்சள்-சிவப்பு யூனிபோம்உடைகளிலே சுவிஸ்காவலர் அணிநடைசெல்ல, அவர்கள் தாங்கிச்சென்ற பரசாயுதம் (கூரியகோடரியும், கூரியமுனையும் கொண்டபுராதனஇராணுவஆயுதம்) ரெலிவிஷனின் பிறைவடிவமான விளக்குகளின் பெருஞ்சோதியிலே பளீரிட்டுக்கொண்டிருந்தன.

## முதற்பேழையின் பக்கமாகப் புனிதஉடல்

சிவப்பு-வெள்ளை-பொன்வர்ண அங்கிகள் அணியப்பட்டிருந்த பாப்பரசரின் புனிதஉடல் தங்களைக்கடந்து சுமந்துசெல்லப் பெற்றபோது, அரைவட்டமான விசிராமத்தின் இருமருங்கும் வரிசையாகஅமர்ந்திருந்த இராசியப் பிரதிநிதிகளும், குருசிரேஷ்டர்களும், பிரபலதரிசகர்களும்எழுந்து ஆசாரஞ்செய்து நின்றுர்கள். கறுப்பு-வெள்ளை அங்கிகள்தரித்திருந்த குருசிரேஷ்டர்களும், பேரழகுவாய்ந்த நவீன மாதிரியான யூனிபோம்உடைகள் அணிந்திருந்த அரசபரிவாரங்களும், சுவிஸ் காவலரும், இரத்தாம்பர நெட்டங்கிகள் தரித்திருந்த கருதிநல்மாரும் விசிராமத்தைநோக்கிப் பாப்பரசரின் உடல்முன்பாக நீடியஊர்வலமாகச் சென்றபோது, "மீசறெறெ"எனும் சங்கீதத்தின் சோகந்தரும் இசையானது அம்மகாதேவாலயத்தின் பெரிய நிலவறைக்குள் படிப்படியாக அலைமோதுவதுபோன்று அதிகரித்துக்கொண்டு [illegible] ஈற்றில் அவரின்உடல் விசிராமத்தின்மத்தியிலே அதுவைக்கப்படவிருந்த முப்பேழைகளில் முதற்பேழையின்பக்கமாகப் பதமையாக வைக்கப்படலாயிற்று. நோபிள்காவலர் படையைச்சேர்ந்த ஐந்து கேர்னல்கள் அதன்பக்கமாக நின்றுர்கள். கருதிநல்மார் பாப்பரசரின் தலைமாட்டுப்பக்கமாக ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

## முதற்பேழையில் வைக்கப்பட்டது

அப்போது அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றியவர் காலஞ்சென்றபாப்பரசரின் டச்சுக்காரரான சக்கிறிஸ்தானுகிய கனிசியஸ் வான் லியேர்டேமேற்றிராணியாரே. தமது வெள்ளைச் சேர்ப்பிளிஸின்மேல் கனமானஓர் கறுப்புக்காப்பையை அணிந்திருந்தஇவர் கடைசிமுறையாகப் பாப்பரசரின்உடலுக்குப் பாவப்பொறுத்தல்ஆசிர்வாதம் வழங்குவதற்காகத் தமதுபரிசாரகருடன் அடியெடுத்துமுன்சென்று அதன் மீதும், அதுவைக்கப்படவிருந்த பேழைமீதும் ஆசிநீர்தெளித்து, அவற்றின்மேல் தூபங்காட்டினுர். அதன்மேல் "சாம்பியெத்றினி" – அதாவது அர்ச். பேதுருவானவரின் சிறியபுதல்வரென அறியப்படுகின்ற அம்மகாதேவாலய பணியாளர்கள் ஆசாரமரியாதையுடன் பாப்பரசரின் உடலைத் தூக்கிச் சிகப்புப்பட்டுக் கரைதைத்த சைப்பிறெஸ் மரப்பேழையில் மெதுவாகவைத்தார்கள். வான்லியேர்டேமேற்றிராணியார் ஆசிநீர்கொண்டு திரும்பவும் ஆசீர்வதித்தபோது, இருகோஷ்டிகளாகப் பிரிந்து மாறிமாறிப் பாடிய பாடகர்குழாமின் சங்கீத ஓசை மேலெழலாயிற்று. அதன்மேல் அங்குபிரசன்னமாயிருந்த 23கருதிநல்மாரும் பதமையாக முன்சென்று முறையேஒவ்வொருவரும் காலஞ்சென்ற தங்கள்பாப்பரசர்மேல் ஆசிநீர் தெளித்தார்கள்.

## பதிலாளிக்காகச் செபம்

அதன்மேல் திருச்சடங்குகளைத் தலைமைதாங்கிநடத்திய குருசிரேஷ்டர் பாப்பரசரது வதனத்தின்மேல் ஓர்வெண்பட்டுத்துணி[illegible]வைத்தார். மற்றோர்குருசிரேஷ்டர் மற்றொன்றை அவர்பாதங்கள்மேல் வைத்தார். திருச்சடங்குகளின் அதிகாரிகள் இருவர் கருஞ்சிவப்பு விரிப்புஒன்றைப் பேழையினுள் நீட்டிவிரித்தபோது, கருதிநல்மாரும், குருசிரேஷ்டர்களும் பாப்பரசரைக் கடைசிமுறையாகப் பார்க்கலானுர்கள். அதன்மேல் வான் லியேர்டேமேற்றிராணியார் மீன்பிடிகாரரின் சிம்மாசனத்தின்மீது தங்கள்பதிலாளிஒருவரைத் தந்தருளுமாறு சம்பேதுரு, சம்பாவிலுஅப்போஸ்தலர்களின் சலுகையை இரந்துகொள்ளும் "சிக்குத் சேர்புஷ்"என்ற புராதனசெபத்தைப் பாடிநின்றுர்.

## வாழ்க்கைவிபரப் பத்திரம்

ஓர்வத்திக்கானின் நொத்தாரிஸான மொன்சிஞ்ஞோர் நிக்கொலோ மெற்றூஅவர்கள் பாப்பரசரின் ஜனனம், அவர் லத்தின்-கிரேக்கபாஷைகளில் அடைந்துள்ளபயிற்சி, அவர் ஓர்குருவாக அபிஷேகம் செய்யப்பெற்றமை, பாப்பரசின் இராசியப்பிரதிநிதியாயும், ஸ்தானிகராயுமிருந்து ஆற்றியபணிகள், 11-ம்பத்திநாதபாப்பானவரின் இராச்சியமந்திரியாராய் நியமனம்செய்யப்பெற்றமை, திருச்சபையின் பிரதமதலைவராகத் தெரியப்பெற்றமை, காஸ்தெல்காந்தல்போவிலுள்ள தமது வேனிற்கால மாளிகையிலே முந்தியவியாழக்கிழமை காலஞ்சென்றமை, மறுதினம் வத்திக்கானுக்கு அவர்செய்த கடைசிப்பிரயாணம்ஆதியனவாய் அவரதுவாழ்க்கையின் பருவங்களைப்பற்றி எழுதியபத்திரம்ஒன்றைப் படித்துக் காட்டினுர். லத்தீன்மொழியிலே அழகானகையெழுத்தில் வரையப்பட்ட இந்தநொத்தாரிஸ் பத்திரத்தின் நீண்டமூலப்பிரதி வெண்கலக்குழல்ஒன்றிலே பக்குவமாகச் சுருட்டிப் பாப்பரசரின்பாதங்களிலே வைக்கப்பட்டது.

## பாராட்டுரைப் பத்திரம்

திருச்சபையின் இளவரசர்களுக்கு எழுதியனுப்பப்படும் லத்தீன்திருமுகங்கள், நிருபங்களின் காரியதரிசியான மொன்சிஞ்ஞோர் அன்ரோனியோ பக்கி அவர்கள் 12-ம்பத்திநாதபாப்பர

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த பாப்பரசரின் அந்தியவேளை

ஐப்பசித்திங்கள் 9-ம்நாள் காலஞ்சென்றபாப்பரசரின் வரலாற்றில் தனிச்சிறப்புப் பெறவேண்டிய ஓர்தினமாகும். 70மணித்தியாலங்களாக உயிருடன் போராடிக்கொண்டிருந்த பாப்பரசர் அன்றுகாலே 2-52மணியளவில் தமது ஆன்மாவைப் படைத்தோன்கரங்களில் ஒப்படைத்தார்.

பாப்பரசர்காலமான சோகசம்பவம் நிகழ்ந்த அவ்வாரத்தில் இரண்டாவது தினமாகிய 6-ந்திகதி திங்கட்கிழமையன்று பாப்பரசரின் குடும்பவைத்தியர் அவசரம்அவசரமாக அல்பான் குன்றின்மேலுள்ள அவரின்கோடைக்காலவாசஸ்தலமாகிய காஸ்தெல்காந்தல்போமாளிகைக்கு அழைக்கப்பட்டார். நாலரைமணித்தியாலங்களின்பின் ரூய்ட்டர்செய்திஸ்தாபனம்கீழ்க்கண்ட செய்தியை அதிகாரபூர்வமாக ஒலிபரப்பியது. பரிசுத்தபாப்பரசர் மிகவும் அபாயகரமானநோயால் வருந்திக்கொண்டிருக்கின்ருரென அவரைப்பரிசோதித்த மூன்றுவைத்தியர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். மூளைக்குச்செல்லும் இரத்தவோட்டம் திடீரெனத்தடைப்பட்டதே அவரின் அபாயமான நிலைக்குக் காரணமாகும்.

உடனடியாக அவஸ்தைபூசுதல் கொடுக்கப்பட்டது. பாப்பரசர் பேசும் சக்தியை இழந்தார். அவரதுபார்வையும் மங்கலாகியது. கரங்களும், கால்களும் உணர்வைஇழந்தன. கடைசியாக அறிவுமயங்கியநிலையில் காணப்பட்டார். கருதினல் மிக்காரு, கருதினல் பியஜாரடா, கருதினல் கானலி, கருதினல்ஆகாக்னியன்முதலியோர் உடன்அவரைத் தரிசிக்கவந்தனர். அறுபதுக்குமதிகமான பத்திரிகைநிருபர்கள் பாப்பரசரின் ஈருந்தசெய்திகளைச்சேகரிக்கக்காஸ்தெல்காந்தல்போவுக்கு விரைந்துசென்றனர். ஒருதிரளானசனக்கூட்டம் பாப்பரசரின்மாளிகைக்குமுன் அவரின்உடல்நிலைபற்றிய செய்திகளை அறியக் காத்துநின்றது.

7-ந்திகதிசெவ்வாய்க்கிழமைமகாலை வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான அறிக்கை பாப்பரசர் சிறிதுகுணமடைந்திருப்பதாக அறிவித்தது. ஆயின், அன்றுமாலை மீண்டும் அதே நோயினல் இரண்டாவதுமுறையாகப் பாதிக்கப்பட்டார். நாடித்துடிப்பும், சீதோஷ்ணநிலையும் மிகஅதிகமாயின. 8-ந்திகதிபுதன்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை கூறியதாவது: பாப்பரசர் குணமடைவாரென்ற நம்பிக்கையின் பெரும்பகுதியை வைத்தியர்கள் இழந்துவிட்டனர்.

அகிலஉலகமும் தனதுபார்வையைக் காஸ்தெல்காந்தல்போவுக்குத் திருப்பியது. பாகிஸ்தானின் இராணுவஆட்சியையும், போர்மோசாப்போரையும் பத்திபத்தியாகவெளியிட்ட பத்திரிகைகள்எல்லாம் தங்கள்பத்திரிகைகளின் முதல்பக்கங்களைப் பாப்பரசரைப்பற்றியசெய்திகளை வெளியிடுதற்காக ஒதுக்கிவைத்துக்கொண்டு வத்திக்கான் வானொலியை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. இச்செய்தி கிடைத்ததும் கொழும்புஅதிமேற்றிராணியார் இலங்கையெங்கணுமுள்ள கத்தோலிக்கர்அனைவரும் பாப்பரசர் குணமடையப் பிரார்த்திக்கவேண்டுமென்று வேண்டுகோள்விடுத்தார். ரோமாபுரியிலே எல்லாத்தேவாலயங்களிலும் திவ்வியசற்பிரசாதம் எழுந்தேற்றஞ்செய்துவேண்டுதல்கள் நடாத்தப்பட்டன. லூர்துகெபியில் மகாவந். தியாஸ்மேற்றிராணியார் பாப்பரசரின் சுகத்திற்காகத் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். பிறசெல்ஸ் நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அகில உலக கண்காட்சியில் இடம்பெற்றுள்ள வத்திக்கான்மண்டபத்தில் விசேஷ வேண்டுதல்கள் நடைபெற்றன. பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கால், மேற்குஜேர்மனி, இத்தாலி, பிரித்தானியாமுதலிய தேசங்களிலெல்லாம் பாப்பரசரின்உடல்நிலை தேறும்படி விசேஷபூசைப்பலிகளும், வேண்டுதல்களும் நடாத்தப்பட்டன. தமதுமரணப்படுக்கையில் சூழநின்றவரிடம் பரிசுத்தபிதா ஓர்வேண்டுகோள் விடுத்தார். தம்மை ரோமாபுரிக்கு எடுத்துச்செல்ல வேண்டும்என்பதே அவ்வேண்டுகோளாகும். பாப்பரசரின் உடல்நிலைக்கு அங்ஙனம்செய்தல் இயலாதிருந்ததால் அவ்வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை. பின்னர்செபியுங்கள், திருச்சபைக்காக அதிகமாகச் செபியுங்கள் என்றுகூறினர். அவர் பக்கத்திலே அவர்சக்கிறிஸ்தாகை நீண்டகாலம் கடமையாற்றிய மகாவந். வான் லியேர்டேமேற்றிராணியார் நின்றுகொண்டிருந்தார். மிகமெல்லனவாகக் கூறப்பட்ட இவ்வார்த்தைகளை அம்மேற்றிராணியார்மட்டுமே கிரகிக்க முடிந்தது. கடைசிநேரத்தில் பிராணவாயுசெலுத்த முயற்சிக்கப்பட்டது. ஆயின் இம்முயற்சி வீணாகியது. தம்மால் அன்பாகநேசிக்கப்பட்ட ரோமாபுரியிலிருந்து 15 மைல்தூரத்தில் அல்பான்குன்றிலுள்ள காஸ்தெல் காந்தல்போமாளிகையில் அமைதிசூழ்ந்த வேளையில் அமரிக்கையாகத் தமது ஆன்மாவைப்படைத்தோன்கரத்தில் ஒப்படைத்தார். நான்குநிமிடங்களின் பின் இச்செய்தி வானொலிமூலம் வண. பிரான்சிஸ்கோ பெலிகிரினிசுவாமியாரால் அவனியெங்கும்அறிவிக்கப்படலாயிற்று.

(தமிழாக்கம் — சாமுவேல் பெனடிக்ற்)

---

## கொட்டாஞ்சேனை—சந்தலூசியா அதிமேற்றிராசனக் கோவிலில்

பரிசுத்தபாப்பரசரின் ஆன்மஇளைப்பாற்றிக்காகக் கொட்டாஞ்சேனை சந்தலூசியா அதிமேற்றிராசனக்கோவிலில் கொழும்புஅதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய தோமஸ்கூறே ஆண்டவரவர்கள் சென்ற 15-ந்திகதி புதன்கிழமை சாயந்தரம் மகாதுக்கப்பாடற்பூசை நிறைவேற்றியபோது, மகாதேசாதிபதியாகிய சேர் ஒலிவர் குணதிலகஅவர்களும், கம்யூனிஸ்தநாடுகள் நீங்கலாக இலங்கையிலுள்ள பிறநாடுகளின் ஸ்தானிகர்கள், இராசீயப் பிரதிநிதிகள், பட்டாளதலைவர்களும், குருமாரும், பிறதர்மாரும், கன்னியாஸ்திரிமாரும், பல்வேறு வாழ்க்கைத்துறைகளைச்சேர்ந்த ஆடவர்களும் பெண்மணிகளும், மற்றும்பிறசமயபிரமுகர்களும் ஆலயத்தில் பெருந்திரளாகத் தேங்கியிருந்தார்கள். மகாதேசாதிபதிஅவர்கள் பலிபீடஸ்தானத்தில் விசேஷ ஆசனம் அருளப்பெற்றிருந்தார். அவர் அங்குபோய்ச் சேர்ந்தபோதுகொட்டாஞ்சேனைக் கட்டளைக்குரவர் வண. நீருஸ் பெர்ஞண்டோ சுவாமியார் அவரைவரவேற்ருர். பிரதமரின் பிரதிநிதியாக அவருடையநிரந்தரகாரியதரிசியான திரு. குணசேன டிசொய்சா சமூகமளித்திருந்தார். திவ்வியபூசையின்பின் வண. ஐஸ்ரின் பெறேருசுவாமியார் காலஞ்சென்றபாப்பரசரையும், அவரது அரும்பெருஞ்சாதனைகளையும்பாராட்டி ஓர்பிரசங்கஞ்செய்தார். அதன்மேல் அதிமேற்றிராணியார் பிரே[illegible]

சென்று பாவமன்னிப்பின் ஆசீர்வாதம் வழங்கினர். அப்போது மகாதேசாதிபதிஅவர்கள் தமது மூன்றுமெய்காப்பாளர் சமேதராய் அப்பேழையின்பக்கமாக நடந்துசென்ருர். அங்குநடைபெற்ற அந்திமதிருச்சடங்குகளின்பின் மரித்தவர்களுக்கானசெபங்கள் பாடப்பட்டன. ஈற்றில் அதிமேற்றிராணியார் அங்குசமூகந்தந்த அனைவருக்கும் நன்றிதெரிவித்து, இந்தவேளை கத்தோலிக்கதிருச்சபைக்கு ஓர்துக்ககரமான தொன்றெனக் கூறலாயினர். சனக்குழாம் கலைந்துசென்றபோது, பாடகர்குழாம் "என்தேவனே உமக்கு அதிகம்சமீபமாக" என்றகீதத்தை உருக்[illegible]

---

# மொழிகொள்ளாதே!

—: "யுவன்" — கரம்பொன் :—

நேரிசை வெண்பா

நித்தியத்தின் தேவன் நியமித்த வானுலகிற்
சத்தியத்தின் வேதத் தலையாகிப் — பத்தொன்பான்
ஆண்டளவா யாண்டின் றமல னடிசேர்பாப்
பாண்டவரைப் பாடும் பரிந்து.

விருத்தம்

எத்திக்கும் அருள்கொழிக்கு மாதவனுய் அஞ்ஞான விருளையோட்டி
வத்திக்கான் தனிலிருந்தே வான்குடையின் கீழுலவு வையமெல்லாம்
இத்திக்குந் தனியரசாய்த் திருச்சபையின் செங்கோலைச் செலுத்திமேலாம்
முத்திக்கோர் வழிதந்த பாப்பரசர் மறைந்ததுயர் மொழிகொள்ளாதே.

●

அந்தமிலாத் திருச்சபையி லணைந்திருக்கும் நாற்பத்தோ டைந்துகோடி
மந்தைகளை மேய்த்துவெகு மாண்புபெற வைத்தபிதா மற்றுநீதி
சிந்தையிலே குன்ருத திருக்கேணி தெரிந்தெடுத்த செபத்தின்வீடு
நந்தாதஅறவிளக்கின் றணைந்துவிட்டார் நமதுதுயர் மொழிகொள்ளாதே.

●

செஞ்சீனத்திருச்சபையிற் றிரண்டெழுந்தகொடும்புயலின் சீற்றத்தாலும்
நஞ்சான ருஷியத்தில் நாத்திகந்தான் நடத்திவரும் நலிவினலும்
விஞ்சியதால் வருந்திமனம் வேதனையிற் ருேய்ந்தனலில் வெந்தோஇன்று
துஞ்சினர்நம் பாப்பரசர் துயரநிலை புகன்றிடவெம் மொழிகொள்ளாதே.

●

பூவுலக சிட்டரொரு கலைஞானி சமாதானப் புனிதவீரர்
தேவமரி பாலகனைக் கண்ணுரக் கண்டவொரு தெய்வநண்பர்
ஆவலொடு காண்பவர்க்குக் காட்சிதந்தே யரவணைக்கு மன்பின்செல்வர்
யாவருக்கும்நல்லபிதா மறைந்துவிட்டார்இத்துயரம் மொழிகொள்ளாதே.

●

மரணமெனுந் திரையிவரை மறைத்திடினும் மங்காத மகிமைகாண்போம்
சிரவணத்தின்சோதியிவர் கல்லறையிலென்றென்றுஞ் சிறக்கக்காண்போம்
அரவணைத்த தேவனது தயவினல் அர்ச்சசிஷ்டர் ஆகக்காண்போம்
பரமனையே யிவர்க்கிவைகள் நல்கவென்று பாதமலர் பணிந்துநிற்போம்.

---

# சமாதான போர்வீரர்

[பாப்பரசரின் மரணத்தைப்பற்றிய "தினகரன்" ஆசிரிய வசனம்]

பரிசுத்த பன்னிரண்டாம் பத்திநாதர் காலமான செய்திகேட்டு 45கோடி கத்தோலிக்கமக்கள் மட்டுமன்றி உலகிலே சாந்தியும், சமாதானமும் நிலவ வேண்டுமென்று விரும்பும் சகலமக்களும் கவலையுறுவர் என்பதிற் சந்தேகமில்லை. நெருக்கடிகள்மிகுந்த இன்றையஉலகிலே நிரந்தர சமாதானமும், அமைதியும் நிலவவேண்டுமென்பதற்காக அயராது உழைத்த சமாதான வீரர்அவர். அன்னரின் தேகவியோகம் உலகமக்களுக்கு ஈடுசெய்யமுடியாத நஷ்டம் என்பதை நாம் இங்கு எடுத்துக்கூறத் தேவையில்லை.

இரண்டாவது உலகப்போர் வெடிப்பதற்கான அறிகுறிகள் உலக அரங்கில் திட்டவட்டமாகக் காணப்பட்டசமயத்திலே பரிசுத்த பன்னிரண்டாவது பத்திநாதர் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார். அன்றைய தினத்திலிருந்து உலகவல்லரசுகளிடையேயும், பிறநாடுகளிடையேயும் சமரசமனப்பான்மையை வளர்க்கத் தம்மாலான சகலசக்திகளையும் அவர் உபயோகித்துவந்துள்ளார். கத்தோலிக்கஉலகின் பாப்பரசராக விளங்கிய அவர் பிறசமயங்களுடன் விரோதமனப்பான்மையுடன் வாழலாகாதுஎன்ற உயரியகோட்பாட்டை என்றும் நிலைநிறுத்திவந்தார். உலகிலுள்ள சமயங்களைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது ஒருமுறை அவர் அருளிய கருத்தை இங்கு நினைவுறுத்துதல் பொருந்துமென எண்ணுகிருேம்.

பல்வேறு சமயங்களும் அருகருகே வாழும் இன்றையஉலகிலே சமயங்களுக்குள்முரண்பாடுகளோ, மோதலோ இருக்கவில்லை என்றும், சமயவாதிகளுக்கும், சமயத்தை நிராகரிப்பவர்களுக்குமே உண்மையான முரண்பாடு இருப்பதாகவும் அவர்கூறியிருக்கிருர். இறைவனில் நம்பிக்கைகொண்டு ஆத்திகர்களாகவாழும் மக்களுக்கும், சடஉலகத்தையே உண்மையெனக் கொண்டு இறைவனைமறந்து நாத்திகர்களாக வாழ்பவர்களுக்கும் இடையேஉள்ள மோதலை எடுத்துக்கூறிய பாப்பரசரின் புனித மொழிகள் சமய வரம்புகளைக் கடந்த உலகப்பொதுமொழிகள் என்று கூறவும் வேண்டுமோ?

காலஞ்சென்றபாப்பரசர்காலத்திலே முக்கியத்துவம்பெற்ற உலகமாற்றங்கள் சில நடைபெற்றன. இரண்டாவது உலகப்போர் மூண்டெரிந்து அணைந்தது. ஆயினும், அதைத்தொடர்ந்து ஆலகால விஷம்போலப் பொதுவுடைமைத் தீ உலகிலே சுவாலைவிடத் தொடங்கியது. ருஷியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனு முதலிய தேசங்களில் கம்யூனிஸம் நிலைத்துவிட்டது. இந்தச் சரித்திரசம்பவங்கள் யாவும் காலஞ்சென்ற பாப்பரசரின் காலத்தில் நடந்தேறியவைகள்.

இவைகள் எவ்வாருகஇருப்பினும் இரண்டாவது உலகயுத்தத்தைத் தொடர்ந்து மூன்ருவது உலகப்போர் மூளுமோ என்றஅச்சம் மனுக்குலத்தின் இதயத்தை அரித்துவரும் இன்றையஉலகிலே காலஞ்சென்ற பாப்பரசர் கலங்கரை விளக்காகநின்று உலகிலே சமாதானம் நிலவுவதற்குப் பாடுபடுபவர்களில் ஒருவராக விளங்கினர். ஆண்டவன் பிரசன்னத்தில் நித்தியகாலமாக அவர்ஆத்மா இன்புற வேண்டும் என்று பிரார்த்திப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈருந்த சேமத் திருச்சடங்குகள்

இற்றைக்குப் பத்துத் தினங்களின்முன் காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாப்பரசருக்காக அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்திலே சென்றஞாயிற்றுக்கிழமை நடந்தேறிய ஈருந்த சேமத் திருச்சடங்குகளுக்கு 53 நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தார்களென வத்திக்கானிலிருந்து தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. 43 கருதினல்மார் கருஞ்சிவப்பு வர்ணம்தேங்கும்நெட்டங்கிகளுடனும், ஒவ்வொருவரும் வெண்மையான சேப்பிளிஸூடன் கூடிய கறுப்புவர்ண நீண்ட அங்கிகள் தரித்த ஒவ்வோர் குருகாரியதரிசியுடனும் சுற்றுப்பிரகாரமாக அம்மகாதேவாலயத்தில் பிரவேசித்தார்கள். அப்பேராலய அரைவட்டவடிவமான விசிராமத்தின்மத்தியிலே மேடைப்பேழையைச்சூழவர எண்ணிறந்த மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன.

கருதினல்மார் இருமருங்கும் ஆசனங்களில்வரிசையாகஅமர்ந்திருந்தார்கள். அவர்கள்பின்னல் எலிசபேத் மகாராணியாரின் பிரதிநிதியாகச் சென்றிருந்த பேர்த்தின் ஏள்பிரபுவைத் தலைமையாகக்கொண்ட பிரித்தானியதூதுக்கோஷ்டிஉட்படப்பிறநாடுகளைச் சேர்ந்த தூதுக்கோஷ்டிகள் அமர்ந்திருந்தன. ஐக்கியஅமெரிக்கதேச இராச்சிய மந்திரியான திரு. ஜோண் பொஸ்றர் டல்லெஸ் அவர்கள் அமெரிக்க பிரதிநிதிகள் கோஷ்டிக்குத் தலைமைதாங்கினின்றார். இந்தக் கோஷ்டியிலே இத்தாலிய அரசாங்கத்தினிடமாய் இருந்துவந்த முன்னைநாள் அமெரிக்க ஸ்தானிகரும், மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து கொண்டவருமான திருமதி கிளேயர் பூத் லூஸூம் அடங்கியிருந்தார்.

ஐரிஷ் பிரதிநிதிகள் கோஷ்டிக்கு ஐரிஷ் ஜனதிபதியான திரு. சீன் ஓ'கெல்லி அவர்கள் தலைமைவகித்திருந்தார். சுதந்திர மேற்குஜேர்மனியின் வெளிநாட்டுமந்திரியான ஹெர் ஹென்றிக் வொன்பிறென்ரானே அவர்களும், பிரான்சிய வெளிநாட்டு மந்திரியான எம். மோறிஸ் தேமூர்வில்அவர்களும் தத்தம்நாடுகளின் கோஷ்டிகளுக்குத் தலைமை தாங்கியிருந்தார்கள். கருதினல்மார் திருச்சங்கத்தின் தலைவரான பிரான்ஸிய கருதினல் யூஜின் திசரூன் ஆண்டவர் அடக்கப் பூசையை நிறைவேற்றினர். அப்போது நோபிள்காவலர் தங்கள் முழு யூனிபோம் உடைகளுடன் காலஞ்சென்றபாப்பரசரைப் பிரதிபலிக்கும் மேடைப்பேழையின்பக்கமாக விழிப்புடன் நின்றார்கள். இந்த ஆடம்பரமான திருச்சடங்கு நிறைவேறிய மகா தேவாலயத்தின் கீழுள்ள நிலவறையிலிருக்கும் தனிமையான சிறிய சிற்றாலயம் ஒன்றில்தான் பாப்பரசரின் புனிதஉடல் சேமிக்கப்பட்டிருந்தது.

—(—)—

## பாப்பரசர் தெரிவும் மூன்று கருதினல்மாரும்

புதியபாப்பரசரைத் தெரிவு செய்யும் கருதினல்மாரின் திருக்கூட்டத்துக்குத் தற்போது சீவந்தராயிருக்கும்55கருதினல்மாருள்ளும் மூவரைத்தவிர ஏனையோரெல்லாம் நிச்சயமாகச் சமுகமளிப்பார்களென வத்திக்கானிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஏறக்குறைய நிச்சயமாகவே சமுகமளிக்க இயலாதிருக்கும் மூன்று கருதினல்மாருள்ளும் இருவர் கம்யூனிஸ்த நாடுகளைச் சேர்ந்தவர்கள். யூகோசிலேவிய நாட்டின் கருதினல் ஸ்ரிபினக் ஆண்டவரும், ஹங்கேரிய நாட்டின் கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவருமே அவ்விருவருமாவர். மூன்றாவது கருதினல் கூறியாவில் ஓர்அங்கத்தவரும், ரோமைநகரப் பிரத்தியேக ஆஸ்பத்திரிஒன்றில் நோய்வாய்ப்பட்டிருப்பவருமான 82 வயதுடைய கருதினல் செல்ஸோ கொன்ஸ்தாந்தினி ஆண்டவரே. இம்மூவரும் நீங்கலாகக் கருதினல்மாரின் திருக்கூட்டம் 17 இத்தாலிய கருதினல்மாரையும், 35 பிறநாடுகளின் கருதினல்மாரையும் அடக்கியிருக்கும். திருச்சபைச்சரித்திரத்திலே இத்தாலிய சாதியினரான கருதினல்மாரின்தொகை குறைவாகவும், ஏனைய சாதியினரான கருதினல்மாரின்தொகை கூடுதலாகவும் இருக்கப்போகும் முதலாவது கருதினல்மாரின் திருக்கூட்டம் இதுவேயாகும். நிற்க, இத்தாலிய கருதினல்மாருள் நோய்வாய்ப்பட்டிருந்த கருதினல் செல்ஸோ கொன்ஸ்தாந்தினி ஆண்டவர் சென்ற 17-ந் திகதியன்றிரவு காலஞ்சென்றாரெனத் தந்திச்சமாச்சாரம் கிடைத்துள்ளது. இவருடைய மரணத்தாலே திருச்சபைக் கருதினல்மாரின் தொகை 54 பேராகக் குறைந்து போயிருக்கிறது.

———

## ஜனுவாரியாரின் புதுமை

நேப்பிள்ஸ்நகர் ஆசனக் கோவிலிலே இந்தப்புதுமை இம்முறையும் நிகழ்ந்திருக்கிறது. இதைப்பற்றி எல்லோருக்கும் அறிவிக்குமுகமாக நேப்பிள்ஸ் நகர மாக்குயிஸ் கருக்கியோலி பிரபு ஓர்வெள்ளைக் கைக்குட்டையை உயரஅசைத்துக்காட்டினர். தங்கள் பாதுகாவலரான அர்ச். ஜனுவாரியாரின் உறைந்திருக்கும் திருஉதிரம் மற்றுமோர்தரம் உருகி இரத்தமாகிவிட்டதென்ற செய்தியைச் சென்ற புரட்டாசிமாதம் 19-ந் திகதியன்று நேப்பிள்ஸ்நகர்வீதிகளில் குழுமியிருந்த மக்களுக்கெல்லாம் இதுதெரிவித்து அவர்களைக் குதூகலிக்கச்செய்தது. அண்மையிலுள்ள பெனெவெந்தோநகரின் மேற்றிராணியாராய் விளங்கியிருந்த அர்ச். ஜனுவாரியார் நான்காம் நூற்றாண்டில் வேதத்துக்காகச் சிரச்சேதஞ் செய்யப்பெற்று வேதசாட்சியாயினர். அவரின் திருஉதிரம் ஓர் சிறிய வெள்ளிப்பேழையிலே இருசிறிய கண்ணடிக்[illegible] துப் பாதுகாக்கப்பட்டுவருகிறது. இந்தப்புதுமை வருடந்தோறும் இந்த அர்ச்சியசிட்டரின் திருநாளன்று நீடிய செபங்களின் பின் நிகழ்ந்துவருகின்றது.

———

## சிக்காக்கோ நகர் அதிமேற்றிராணியார்

சிலமாதங்களுக்குமுன் விசுவாசப் பரப்புதல் திருச்சங்கத்தின் பதிற்தலைவராய்நியமனம்பெற்று ரோமாபுரிசென்று பதவி ஏற்குமுன்னரே மரணமடைந்த கருதினல் ஸ்றிற்ச்ஆண்டவர் சிக்காக்கோ நகர் அதிமேற்றிராணியாராக இருந்துவந்தவர். அவருக்குப்பதிலாக இப்பொழுது மெயர் ஆண்டவர் சிக்காக்கோநகர் அதிமேற்றிராணியாக நியமனம்பெற்றுள்ளார். கருதினல் ஸ்றிற்ச் ஆண்டவரைப்போலவே இவரும் இதற்குமுன் மில்வாக்கிநகர் அதிமேற்றிராணியாராக இருந்தார். இவருக்குத் தற்போது 55 வயது. ரோமாபுரியில் வேதசாஸ்திரம்பயின்று, 1926-ம் ஆண்டு குருப்பட்டம்பெற்றவர். 1946-ம் ஆண்டு மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டவர். சுமார் 20 லட்சம் கத்தோலிக்கரையும், 2,000 குருமாரையும் கொண்ட சிக்காக்கோநகர் மேற்றிராசனம் அமெரிக்காவில் மட்டுமன்றி உலகிலயே மிகப்பெரிய அதிமேற்றிராசனம்.

———

## போலிஷ் கருதினலின் பிரயாணம்

புதியபாப்பரசரைத் தெரிவு செய்வதிலே கலந்துகொள்ளுமாறு போலாந்துதேச கருதினல் ஸ்ரீபன் விசின்ஸ்கி ஆண்டவர் சென்ற 17-ந் திகதியன்று இரவு றெயின் மார்க்கமாக வத்திக்கானுக்குப் பயணமானரென வார்சோ நகரிலிருந்து தந்திச் சமாச்சாரம் கிடைக்கலாயிற்று. காலஞ்சென்ற பாப்பரசரின் பதிலாளிஒருவரை மற்றும் கருதினல்மாருடன்சேர்ந்து தெரிவுசெய்வதற்காக இரும்புத்திரைக்குப் பின்னுள்ள "மவுன திருச்சபை"யிலிருந்துபோகும் ஒரேயொரு கருதினல் இவரேயாவர். போலிஷ் குருசிரேஷ்டரைப் பயணமனுப்பி வைப்பதற்காக றெயில்வேப் பிளாட்பாரத்தில் சுமார் 300 கத்தோலிக்கபிரமுகர்கள் குழுமியிருந்தார்கள்.

—(—)—

# பாப்பரசர் அளித்துப்போன ஈருந்த பேட்டி

[இத்தாலியிலே இலங்கை அரசாங்க தூதவராய் இருந்துவருகிறவரான திரு. எச். ஏ. ஜே. ஹூஹல்ல அவர்கள் எழுதிய கட்டுரையின் ஓர்பகுதி இதுவாகும்.]

"இத்தாலியதேசம் ஐரோப்பியநாடுகளிலே மிகப்பெரிய கம்யூனிஸ்தகட்சியைக் கொண்டிருக்கின்றபோதிலும் எவருமே தப்பாது இத்தாலியமக்கள் எல்லோருமே 12ம்பத்திநாதபாப்பரசருக்குத் தங்கள் இதயங்களிலே திடபற்றுதலுள்ள ஓர்தனியிடத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவரின் புனிதவாழ்க்கையை அவர்கள் கனப்படுத்திவந்தார்கள். அவரின் சிறந்த மதியூகத்தை வியந்து பாராட்டினார்கள். யுத்தகாலத்திலே அவருடைய தைரியத்தையும், மனுஷத்தன்மையையும், தயைதாட்சணியத்தையும் ஞாபகத்தில் கொண்டுள்ளார்கள்.

"முசோலினி வீழ்ச்சியடைந்த பின்னரும், அரசர் சிம்மாசனத்தைவிட்டுத் தப்பியோடியபின்னரும் ரோமர்களுக்கு இருந்துவந்த ஒரேயொருபாதுகாவலர் பாப்பரசரே. பெருந்தன்மையுடன் நடந்துகொண்ட ஒரேயொரு பொதுமனுஷர் அவரே. கம்யூனிஸ்தர்களும், சோஷலிஸ்தர்களும், தப்பியோடிவந்த யுத்தகைதிகளும் ரோமைநகரை ஆக்கிரமித்திருந்த நாஸிய ஜேர்மனியர்களால் வேட்டையாடப்பட்ட மற்றெவ்வொருவருமே பாப்பரசரது உத்தரவின்பேரில் வத்திக்கானில் புகலிடம் அருளப்பெற்றார்கள்.

"தமதுசீவியகாலத்திலே தங்களுக்கு அதிகம் அண்மையிலிருந்தவரும், தாங்கள் நேசிக்கப் பழ[illegible]மான ஒருவரின் ஆத்துமத்துக்காகச் சென்ற வாரத்திலே ரோமர்கள் சிரங்கவிழ்ந்து செபஞ்செய்யலானார்கள். அவரும் ஏறக்குறையத் தமது மரணநேரம்வரையிலே தமது கடமையைச் சரிவரச் செய்துவிட்டுச் சமாதானமாக மறுஉலகம் சென்றுவிட்டார். தாம் மரிப்பதற்கு மூன்றுதினங்களின்முன்னரே சுமார் இரண்டாயிரம் மக்கள் கோஷ்டி ஒன்றுக்கு 20 நிமிஷநேரம் பேட்டியளித்து ஓர் சொற்பொழிவு நிகழ்த்தி அவர்கள்மத்தியிலே உலாவிவந்தார். இதுவே அவரின் கடைசிப் பொதுப்பேட்டியாகும்.

"இவ்வாண்டின் கோடைகாலத்திலே அநேகசந்தர்ப்பங்களில் இலங்கை நண்பர்களுடன் காஸ்தெல் காந்தல்போ மாளிகைக்குச் சென்றிருக்கிறேன். நான்குவாரங்களின்முன் அங்கு நான் இருந்தபோது என்னுடன் வந்திருந்த நண்பனை நோக்கி, இருவாரங்களின்முன் நான் அவரைக் கண்டபோது இருந்ததைக் காட்டிலும் பாப்பரசர் அதிகம் பலங்குன்றித் தளர்ச்சியடைந்திருக்கிறரென நான் எண்ணுவதாகக் கூறினேன். இப்போது 12-ம் பத்திநாத பாப்பரசர் தமது உடன்மனிதரை நேசித்து, அவர்களுக்குச் சேவைசெய்த மற்லெல்லோருடனும் சேர்ந்துகொள்ளச் சென்றுவிட்டார். அவரைப் பற்றிச் சரித்திரம் என்ன சொல்லும்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய வேத
பாதுகாவலன்
1958-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 23-ந் திகதி

## நீர் எங்கிருந்து வருகிறீர்?

அன்று தேவகுமாரன் நடுவனான பிலாத்துவினது நீதாசனத்தின்முன்பாக நிற்கின்றார். யூதர்களும், அவர்களின் தலைவர்களும் எந்தவிதமும் அவரை ஒழிக்க வேண்டுமென்ற குரோதசிந்தையுடன் அங்கு நிற்கின்றனர். அநேக பொய்க்குற்றச்சாட்டுகளை அவர்மேல் சுமத்துகின்றனர். அவற்றில்ஒன்று, இவர் தம்மைக் "கிறீஸ்துவாகிய இராசா" என்று சொல்லுகிறார்என்பதே. அதைக்கேட்டதே பிலாத்தன் அவரைவிழித்து, "நீ இராசாவோ?" என்று வினவுகின்றான்.

"இந்தயேசுநாதர்"—அதிசயத்துக்குரிய இந்தமனிதர் யார்? இவர் மெய்யானமனிதர் தானா? அநேககுற்றச்சாட்டுகள், குரூர வேதனைகள்மத்தியிலே அவரிடம் தோன்றிய அமைதிநிறைந்த மாட்சிமையையும், பொறுமையையும், மௌனத்தையும்கண்டு வியப்படைந்தவனாய், "நீர் எங்கிருந்துவருகிறீர்?" என வினவுகின்றான். அவர் மனிதரிலும் மேலானவர், தேவகுமாரனென்று அநேகர்கொண்டிருந்த நம்பிக்கையில் உண்மையுண்டாவென்று அறியவிரும்பியே அவ்விதம்வினவுகின்றான்.

கிறீஸ்துநாதர் கல்வாரிமலையிலே சிலுவையில்அறையுண்டிருக்கும்போது, அவரின் வலதுபுறத்திலே சிலுவையில்தொங்கிய கள்வன் அவரைநோக்கி: "சுவாமி, தேவரீர் உம்முடைய இராச்சியத்தில் சேரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறான். அவர்சிலுவையிலே சீவனைவிட்டபோது, அந்தநண்பகலிலே, அந்தகாரத்தின்மத்தியிலே அச்சத்தால் நடுங்கிக்கொண்டு சிலுவையருகில் அவர் எதிரேநின்ற அஞ்ஞானியாகிய செந்தூரியன் அப்பொழுதுசம்பவித்ததைக்கண்டு, "இந்தமனிதன் மெய்யாகவே சர்வேசுரனுடையகுமாரன் தான்" என்று ஆச்சரியத்துடன் பகர்கின்றான்.

அன்பின் அரசராகிய கிறீஸ்து இராசாதிருநாளை நாம் கொண்டாடவிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் "நீர் எங்கிருந்துவருகிறீர்?" என்றவினாவையும், அதன்விடையையும், வலதுபுறக்கள்வனின் மனுவையும், செந்தூரியன்கூறிய சாட்சியத்தையும் தியானித்து, கிறீஸ்துஇராசாவின் பிரமாணிக்கமுள்ள உத்தமபிரசைகளாயும், அவரது ஞானஇராச்சியம் அகிலமுழுவதும் பரந்தோங்கச்செய்வதில் ஆர்வங்கொண்டுழைக்கும் அப்போஸ்தலர்களாயும் இருந்துவரத் திடசங்கல்பம் செய்வோமாக!

# புதிய பாப்பரசராக எவர் தெரியப்படுவார்?

12-ம்பத்திநாத பாப்பரசரினிடமாகக் கிறீஸ்துநாதரின் பதிலாளியாய், ரோமாபுரியின் மேற்றிராணியாராய்க் கருதினால்மாருள்ளே எவர்தெரியப்படுவார்? தூரநாடுகளிலுள்ள கருதினால்மார் நேரத்தோடு வத்திக்கான் இராச்சியம் வந்துசேரத்தக்கதாக 1922-ம் ஆண்டு 11-ம்பத்திநாதபாப்பானவர் முந்தியபழையஒழுங்கை — அதாவது பாப்பரசர்ஒருவர் மரணமடைந்து 10 தினங்களின் பின் தேர்தல்நடைபெற வேண்டுமென்ற பழைய ஒழுங்கை மாற்றிவிடலாயினர். தற்போது 15-ம் நாளில் அன்றேல் கருதினால்ஒருவர் இடைவழியிலே இன்னமும் வந்துகொண்டிருப்பாரானால் மேலும்ஒருசில தினங்களின்பின்னரும் தேர்தல்ஆரம்பமாகலாம். புதிய பாப்பானவரைத் தெரிவுசெய்யக் கூடியிருக்கும் கருதினால்மார் ஒவ்வோர்காலையிலும், சாயந்தரமும் இருமுறை வாக்குச்சீட்டுகள் போடுவார்கள். இத்தனை நாளென்று கிடையாது. ஆனால், தேர்தல்நேரத்தோடு ஓர் முடிவுக்கு வரவேண்டுமென்றே எல்லோரும் ஆசிப்பார்கள். தேர்தல் முடிவடைந்த ஒருமணிநேரத்துள் புதிய பாப்பரசரின்நாமம் அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்தின் மேல்மாடியிலிருந்து பிரசித்தமாக அறிவிக்கப்படும். இது எவருடையதாயிருக்கும்?

மக்கள்பலரும் சிலவருடங்களாக 63 வயதுடைய கருதினால் பீற்றர் அகானியானியன் ஆண்டவரிலேயே ஓர்புதிய பாப்பரசரைக் கண்டிருக்கிறார்கள். இவர் ரூஷியாவிலே — ஸ்ராலினின் தாயகமாகிய ஜோர்ஜியாவிலே பிறந்தவர். ஆங்கிலம்உட்பட ஏறக்குறையப் பன்னிருபாஷைகளைப் பேசிவருகின்றவர். தற்போதுஇவர் விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் பதிற்தலைவராக ரோமாபுரியிலே சஞ்சரித்துவருகின்றார். இந்தப்பதவிக்கு நியமனம்பெற்று ஏறக்குறைய ஒருமாதகாலத்தின்பின் காலஞ்சென்ற ஓர்அமெரிக்கரான கருதினால் ஸ்றிற்ச்ஆண்டவரிடமாகவே இவர் நியமனம்செய்யப்பெற்றார். 12-ம் பத்திநாதபாப்பரசர் 1946-ம் ஆண்டு 31குருசிரேஷ்டர்களைக் கருதினால்பதவிக்குஉயர்த்திய சரித்திரப்பிரசித்திபெற்ற கருதினால்மார் திருச்சங்கத்திலேயே இவரும் ஓர்கருதினால்ஆக்கப்பெற்றார். புதியபாப்பரசராக இவர் தெரியப்படுவாரானால் 1523-ம்ஆண்டு காலஞ்சென்ற ஓர்டச்சுக்காரரான 4-வதுஅதிரியான் எனும் பாப்பானவருக்குப்பின் இத்தாலியர்அல்லாத முதலாவதுபாப்பரசராய் இருப்பார்.

நிற்க, ஞாபகத்திற்கெட்டிய காலம் வரையிலே பாப்பரசர்பதவிக்கு வரக்கூடியகருதினால்மார்களாய் அத்தனை அதிகமானோர்இருப்பது முன்னில்லாத ஓர் அபூர்வசம்பவமாகுமென்று வத்திக்கான்நிபுணர்கள் கூறியதாய்ச் செய்திகிடைத்திருக்கிறது. ஒருகாரியம்மாத்திரம் ஏறக்குறைய நிச்சயமாகக் காணப்படுகின்றது. அதாவது, கடந்த 435வருடகாலப் பாரம்பரியமானதுஇடையிலேகுலையாது, அடுத்த பாப்பரசரும் ஓர்இத்தாலியராகவே இருப்பாரென்று அவர்கள்நம்புகின்றார்கள். தற்போது திருக்கூட்டத்துக்குச் சமுகமாகும்கருதினால்மாரில் மூன்றில்இரண்டுபங்கு வாக்குச்சீட்டுகளையும், அவற்றுடன் மேலதிகமாக ஒன்றையும் எவராவதுஒருவர் பெற்றுப் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்படுமுன் முதலாவதுவாக்கெடுப்பிலே இத்தாலியகருதினால்மார் 17பேருள்ளும் குறைந்தபட்சம் ஐந்துபேராவது பாப்பரசர்பதவிக்கு வாக்குச்சீட்டுகள் பெறக் கூடியோர் ஆவார்களெனக் கொள்ளப்படுகிறது. இவர்களில் முக்கியமான இருவரின் நாமங்கள் வருமாறு:

(1) கருதினால்ஜூசெப்பி சிறியாண்டவர். இவர் ஜெனோவாநகர் அதிமேற்றிராணியார். 52வயதுமாத்திரமே உடையவர். கப்பல்பழுதுபார்க்கும் துறைத்தொழிலாளி ஒருவரின் புதல்வர். இவர் தமது 46-வதுவயதிலே கருதினால்பதவிக்கு உயர்த்தப்பெற்றார். இவரே கருதினால்மாருள்எல்லாம் வயதில்அதிகம்இளையவர். இவர் கீர்த்திவாய்ந்த ஓர்பிரசங்கியார், சிறந்த எழுத்தாளர், ஓர்ஆசிரியர் என்றமட்டிலும், இத்தாலிய கத்தோலிக்கசேவை இயக்கத்தை முன்னேற்றமாக நடத்திச்செல்லும் பலமிக்கதீரர் என்றமட்டிலும், கத்தோலிக்க சமூகதத்துவங்களின் விருத்தியாளர் என்றமட்டிலும் அதிகம்பிரசித்திபெற்றவர்.

(2) அடுத்தபாப்பரசரைத் தெரிவுசெய்யவிருக்கும் கருதினால்மாரின் திருக்கூட்டத்திலே அதிகம்கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கவிருப்பவர்களில் பொலொஞ்ஞாநகர் அதிமேற்றிராணியாரும், புன்னகைபூர்த்தவரும், தர்க்கவாதத்தில் தலைசிறந்தவருமான கருதினால்ஜியாக்கோமோ லெர்காறோஆண்டவரும் ஒருவராயிருப்பாரெனச் செய்திபரந்துள்ளது. "பிள்ளைகளின் கருதினால்" என்று அழைக்கப்படுகிறவரான இவர் தாமுமே 14வயதுடைய ஒருவரைக்காட்டிலும் அதிகம் உயர்ந்தவர்அல்ல. ஆயினும், கத்தோலிக்கஉலகம் முழுவதினதும் கவனத்தை ஈர்த்துகொள்ளும் ஓர்நடுநாயகமாயினார். இவரே பாப்பரசராவாரென வத்திக்கான் நிபுணர்கள்அநேகரும், பிறரும் நம்புகிறார்கள்.

---

### கன்னியாஸ்திரிகளானதாதிமார்

இவ்வருடமுடிவில் அரசினர்வைத்தியசாலைகளில் கடமைபார்க்கும் கன்னியாஸ்திரிதாதிமாரின் சேவையை நிறுத்தும் ஒழுங்கிருக்கிறது. பகுதிபகுதியாக இவர்கள்நீக்கப்படுவர். பிறதேசத்தவர்கள் வேண்டியதில்லை. உள்ளூரவர்களுக்கு வேலைகொடுபடவேண்டும். நல்லயோசனையாகப் படலாம். பிறதேசபொருட்கள், தொடர்புகள், உதவிகள்இன்றிச் சுயமாகக் கௌரவமாய்வாழநினைப்பது நல்லது தானே. ஆனால், எத்தனையோகாரியங்களில் பிறதேசங்களின்தேவை இன்னுமின்னும் வேண்டிக்கிடக்கிறது. அன்பும், தியாகமும், சேவைஉணர்வும், தெய்வசிந்தையுமுள்ள இவர்களின் நற்பணியை அவசரப்பட்டுநீக்கிவிடுவது புத்தியாகுமாஎன்பதுதான் ஆலோசிக்க வேண்டியவிஷயம். அன்று அம்மைநோயில் அவஸ்தைப்பட்டார் ஒருபுத்தகுரு. ஆதரவுகொடுக்க நம்நாட்டுத் தாதிமார்எவரும்விரும்பவில்லை. இந்தக் கத்தோலிக்கதாதிதான் ஏவப்பட்டார். மறந்துவிட அவ்வளவுகாலம் போகவில்லை. தாம்அழைக்கப்பட்ட பணிக்குத் தம்மைஅர்ப்பணிக்கும் இவர்கள் சேவையை — உதவியை இயன்றமட்டும் பயன்படுத்த வழிகாண்பது நட்டமாகாது.

— உதயதாரகை

### ஐப்பசிமாதம்

**பொதுக்கருத்து:** பொது உணவு விடுதிகளிலும், தங்குமிடங்களிலும் தொழில்ஆற்றுகிறவர்களின் ஆன்ம இரட்சணியத்திற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** சுதேசகுருமாரின் அபிவிர்த்திக்காகப் பாப்பரசர் ஏற்படுத்தியுள்ள அர்ச். இராயப்பர் சபைக்குச் சகலவிசுவாசிகளும் ஆக்கமிகுந்த ஆதரவு அளிக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

## உலகத்துக்கொரு நஷ்டம்

கத்தோலிக்கமக்கள் சீனாவிலிருந்து அமெரிக்காவரை பரவியிருக்கிறார்கள். பலநாடுகளில் பலமொழிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் எல்லோருக்கும் ஒரு பெரிய மதத்தலைவர் இத்தாலிநாட்டின் ரோமாபுரியிலுள்ள போப். கத்தோலிக்ககுருநாதரின் இந்தச் செல்வாக்கைப் பார்க்கும்போது அவரையே உண்மையான 'லோககுரு' என்று சொல்லலாம்

இந்த ஸ்தானத்துக்கு எத்தனையோ பேர் வந்திருக்கிறார்கள். இப்போது காலமானபோப் பயஸ் உலகில் எல்லா மக்களின் உள்ளங்களையும் கவர்ந்த மதத்தலைவராக இருந்தார். தமது மதக் கோட்பாடுகளில் சிறந்து விளங்கியதோடுமட்டுமல்ல, அன்பு இதயம் படைத்தவர்; பரந்த மனப்பான்மை கொண்டவர். உலகமக்களின் துயரங்களை உணர்ந்து அதற்குரிய பரிகாரங்களைத்தைரியமாகச் சொல்லிவந்தவர்.

உலக வல்லரசுகள், விஷக்குண்டுகள் உற்பத்திசெய்வதையும், சோதனைகள் நடத்துவதையும் கடுமையாகக் கண்டித்துவந்தார். "உலகத்தை அழித்துவிட ஏராளமாகப் பணம் செலவழித்துக் குண்டுகளை உற்பத்தி செய்யும் இந்தப் பயங்கரப்போட்டி என்னத்துக்கு? வேண்டாம்!" என்று பலதடவை வன்மையாகக் கண்டித்தார்.

தற்காலமக்கள் பொழுதுபோக்கு என்று சொல்லிக்கொண்டும், காலத்தையும், பணத்தையும் விரயமாக்கி வருவதோடு உள்ளத்தூய்மையைக் கெடுத்துக்கொள்வதை மிகக் கடுமையாக எச்சரித்துவந்தார். அரசியல்விவகாரத்துறையிலும் மிக்க தெளிவான நோக்குடன் விளங்கினார்.

போப் காலமாவதற்குமுன் எழுதிவைத்த தமது கடைசி விருப்பத்தைப் படிப்பவர்கள் நெஞ்சம்உருகாமலிருக்க முடியாது.

"சொல்லாலும், செயலாலும் யான் யாரையாகிலும் புண்படுத்தியிருந்தால் அவர்கள் எல்லோரும் என்னை மன்னிக்கும்படி வணக்கத்துடன் கோருகிறேன்.

"எனக்காக ஞாபகசின்னங்கள் எழுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனதுஉடலை ஒரு நல்லஇடத்தில் அடக்கம்செய்தாலே போதும். யாருக்கும் தெரியாதஇடமாயிருந்தால் இன்னும்மேல்.

"எனக்காகப் பல பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெறும் என்பது எனக்குத் தெரியும். அதனால் அதைப் பற்றி நான் எடுத்துச்சொல்லவேண்டியதில்லை."

இவ்வாறு அவர் அந்தியகாலத்தில் எழுதிவைத்ததைப் படிக்கும்போது அவருடைய அடக்கம் புலனாகிறது. அந்த அடக்கமே அவர் எவ்வளவு பெரிய மகான் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சிறந்த ஞானியை உலகம் இழந்துவிட்டது. கிறீஸ்துவர்கள் மட்டுமல்ல, நாம் அனைவரும் துயரத்தில் மூழ்க வேண்டிய நிகழ்ச்சி.

— கல்கி

---

● புதியபாப்பரசரின் தேர்தலின்போது கருதினால்மார் திருக்கூட்டத்தால் போடப்படும் வாக்குச்சீட்டுகளை எரிப்பதற்கெனச் சென்ற17-ந் திகதியன்று சிஸ்ரைன்சிற்றாலயத்திலே ஓர் புதுமாதிரியான சூட்டடுப்பு அமைக்கப்பட்டிருப்பதாக வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. 12-ம்பத்திநாதபாப்பரசரைத் தெரிவுசெய்த 1939-ம்ஆண்டின் கருதினால்மார்களது திருக்கூட்டத்தில் பாவிக்கப்பட்ட பழையசூட்டடுப்பைப் பணியாளர்கள் பலதினங்களாகத் தேடியும்அது காணாமற் போயினமையால் ஓர் புதிய அடுப்பு வாங்க உத்தரவாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் எங்ஙனம் தெரிவுசெய்யப்படுகின்றார்?

— ஆசிரியர், சாமுவேல் பெனடிக்ற் —

ஒருபாப்பரசர் காலமாயினரென்பதை அறிந்தவுடன் அவனியெங்குமுள்ள கருதினல்மார் அனைவரும் ரோமைநகர்வந்து சேரவேண்டுமென்பது மிகவும்கண்டிப்பான விதியாகும். கருதினல்மார்திருச்சங்கத்தின் அங்கத்தினர்தொகை 72பேருக்கு அதிகமாகக்கூடாதுஎன்பது நியதியாகும். ஆயின், கருதினல்யாராவது காலஞ்செல்லுமிடத்து உடனே அவரிடமாக வேறொருவர் நியமிக்கப்படுவதில்லை. பாப்பரசர்கள் காலத்துக்குக்காலம் சிலரைக் கருதினல் அந்தஸ்துக்கு உயர்த்துவார்கள். கருதினல்அந்தஸ்துக்கு அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், வத்திக்கானில் உயர்பதவிகள்வகிக்கும் குருமார்மத்தியிலிருந்து தகுதிவாய்ந்தோர் தெரியப்படுகின்றனர்.

காலஞ்சென்றபாப்பரசரின் அந்திம திருச்சடங்கு முடிவுற்றதும் புதியபாப்பரசரைத் தெரிவதற்கான அலுவல்கள் ஆரம்பமாகும். கருதினல்மார் திருச்சங்கதலைவர் கூட்டம் ஆரம்பமாகும் திகதியையாவருக்கும்அறிவிக்க, குறிப்பிட்டதினத்தில் எல்லாக்கருதினல்மாரும் தங்கள்பணியாளர்களுடன் சமுகமளிப்பார்கள். ஒவ்வோர்கருதினலும் தமக்குதவியாக ஒருகுருவானவரையும், பணியாளனையும்மட்டுமே வத்திக்கான்அரண்மனைக்குள் அழைத்துச்செல்லலாம். வத்திக்கான்அரண்மனையில் அன்னார் தேர்தலுக்காகக் கூடும் திருக்கூட்டத்தைக் கான்கிளேவ் எனஅழைப்பர். அடைபட்டகூட்டம் என்பது அதன் பொருள். பாப்பரசரின் தேர்தலுக்காக அந்தரங்கக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் கருதினல்மார் தேர்தல்முடியும்வரை வத்திக்கான் அரண்மனைக்குவெளியே செல்லவோ, பிறருடன்உரையாடவோ இயலாது. திருக்கூட்டம் ஆரம்பமாகும்தருணத்தில் கருதினல்மார்அனைவரும் அரண்மனையில் சமுகமளித்தபின் கதவுகள்சாத்தப்பட்டு அரண்மனைக்காவலாளரால் காவல்செய்யப்படும். பாப்பரசர்தேர்தல்முடியும்வரை கருதினல்மாரின் ஊழியாகளைத்தவிர ஏனையோர் அங்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அடுத்தநாட்காலை கருதினல்மார் சிஸ்ரைன்சிற்றாலயத்தில்கூடித் தங்கள் சபையின் தலைவரான கருதினல்நிறைவேற்றும் தூயஆவியின்பூசைப்பலியில் பங்குபெறுவர். பின்னர் பாப்பரசரின் தேர்தலுக்கான சட்டங்கள்அனைத்தும் வாசித்துக்காட்டப்பட்டபின் அவற்றின்படியே நடந்துகொள்வதாக ஆங்கு குழுமியுள்ளோர்அனைவரும் பிரமாணம் செய்துகொள்வர். அதன்மேல் கருதினல்மார் தனித்தனிஆசனங்களில் அமர்ந்து அங்குவைக்கப்பட்டிருக்கும் சீட்டின்மத்தியில் தாம்தெரிவுசெய்பவரின் பெயரையும், அடியில்யாதாமொரு வேதவாக்கியத்தையும்குறித்தபின் சீட்டைமடித்துச் சகலரும்பார்க்கும்வண்ணம் பீடத்தின்நடுவிலுள்ள பெரியதோர்பாத்திரத்தில் போடும்போது "கடைசித்தீர்ப்புநாளில் எனக்கு நடுவாயிருக்கும் கிறிஸ்துவின் முன்னிலையில் பாப்பரசரின் அந்தஸ்துக்கு யார்தக்கவரென்று என்உள்ளம் சொல்லுகிறதோ அவருக்கே நான் சீட்டுப்போடுகின்றேன். இதற்குத் திரியேகக்கடவுளே சாட்சி" என ஆணையிடுவார்கள்.

யாவரும்வாக்களித்தபின் சீட்டுக்களை எண்ணிப்பார்ப்பர். சட்டத்தால்குறிக்கப்பட்ட மூன்றில் இரண்டுபங்கு தொகையாவதுஎந்தக்கருதினலுக்கும் கிடையாவிடில் அத்தேர்தல் செல்லுபடியாகாதுஎன அறிவிக்கப்படும். பாப்பரசரின் தேர்தலுக்கான அந்தரங்க கூட்டம் ஆரம்பமானவுடன் கத்தோலிக்கமக்கள் திரளாக ரோமைநகரிலுள்ள அர்ச். இராயப்பரின் மகா தேவாலயமுன்றிலில் திரளாகக்கூடி முடிவையறிய ஆவலுடன் காத்துநிற்பர். தேர்தல் செல்லுபடியாகாதெனக் கருதினல்மாருக்கு அறிவிக்கப்பட்டபின் அவர்கள் தம்சிற்றறைகட்குச் செல்ல, அவர்கள்அளித்தசீட்டுக்களை ஈரவைக்கோலுடன் சேர்த்துக் கொளுத்துவர். ஈரவைக்கோலின் கரும்புகை புகைபோக்கிவழியாகச் சிற்றாலயத்தின்மேலெழும்ப, ஆங்குகுழுமியுள்ள மக்கள்கூட்டம் 'தேர்தல்முடியவில்லை என்பதையறிந்து ஏமாற்றத்துடன் வீடுதிரும்புவர். குறிப்பிட்ட மூன்றில்இரண்டுபங்கு சீட்டுக்கள் ஒருவருக்குக்கிடைக்கும்வரை காலையிலும், மாலையிலும் மாறிமாறித் தேர்தல் நடாத்தப்படும்.

குறித்ததொகை ஒருவருக்குக் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டதும் கருதினல்மார்அனைவரும் தங்கள்ஆசனங்களைவிட்டெழுந்து தெரியப்பட்ட கருதினலைச்சூழ்ந்துநிற்க, வயதில் முதிர்ந்தவரான கருதினல்ஒருவர் தெரியப்பட்டவரின் முன்னர்சென்று "ஆண்டவரே, பாப்பரசராக நீர் இப்போது தெரியப்பட்டதை ஏற்றுக் கொள்ளுகின்றீரா?" என வினவுவார். தெரியப்பட்டவர் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தவுடன் மற்றையகருதினல்மாரின் ஆசனங்கள் அனைத்தும் தாழ்த்தப்படும். இதுவரை கருதினல்மாருடன் சமத்துவமாயிருந்த தெரியப்பட்ட கருதினல் இப்போது திருச்சபையின் தலைவராக உயர்த்தப்படுகின்றார் என்பது இதன் பொருளாகும். இதே தருணத்தில் புகைபோக்கியின்வாயிலாக வெண்புகையெழும்ப, மக்கள் திரள் திருச்சபையின் தலைவர் தெரியப்பட்டதையெண்ணி மகிழ்ச்சியுடன் ஆரவாரித்து அடுத்தநிகழ்ச்சியை எதிர்நோக்கும். இப்போது, அரண்மனையில் சிலபுனிதசடங்குகள் இடம்பெறும். பாப்பரசர் எப்பெயரைத் தரிக்கவிருக்கிறார்என வினவப்படும். பாப்பரசரின் வெள்ளை அங்கியையும், செம்படவன் கணையாழியையும் தெரியப்பட்டகருதினலுக்கு அணிவிப்பார்கள். மற்றைய கருதினல்மார்அனைவரும் புதியதலைவருக்குத் தங்கள்தாழ்மையான மங்களங்களைக்கூறி அவரின் ஆசியைப் பெறுவார்கள்.

இச்சடங்குகள் முடிவடைந்ததும் அர்ச். இராயப்பர் தேவாலய மேல்மாடியின்சாளரங்கள் திறக்கப்பட்டுக் கிறாதிகளின்மேல் இரத்தினக்கம்பளங்கள் விரிக்கப்படும். கருதினல்ஒருவர் அங்குதோன்றி "நான் உங்களுக்கு மாபெரும்நற்செய்தியொன்று கூறுகின்றேன். இராயப்பரின் பதிலாளியாக மீண்டும்நமக்குப் பாப்பரசர் இருக்கின்றார். அவர்தான் மகாமேன்மை தங்கிய கருதினல்.........அவர்கள். அன்னார்........என்றநாமத்தைத் தெரிந்துகொண்டார்" என உரைப்பார். இத்தருணத்தில் மக்களின் மகிழ்ச்சிஆரவாரங்களுடன் இராயப்பர்தேவாலய கண்டாமணிகளும், ரோமைநகரிலுள்ள ஏனையதேவாலயங்களின் மணிகளும் ஆர்ப்பரித்துப் புதிய பாப்பரசரைவரவேற்றுநிற்க, புதிய பாப்பரசர் மகாதேவாய மேல்மாடியில் சிறிதுநேரம்காட்சியளித்துப் பின்னர் ஆங்கு குழுமிநிற்போரை ஆசீர்வதிப்பார். அதன்மேல்ஓர்தினம் குறிப்பிடப்பட்டு முடிபுனைவிழா விமரிசையாக நடந்தேறும்.

## பாப்பரசரின் புனிதஉடல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சரைப்பற்றிய பாராட்டுரையைப் படித்தார். இந்தப்பாராட்டுரையின் மூலவசனங்கள் பொறிக்கப்பட்ட அழகியசித்திராலங்கார வேலைப்பாடுகளைக்கொண்ட பதனிட்டதோற்பத்திரமும் ஓர்குழலில்சுருட்டிப் பேழையினுள்வைக்கப்பட்டது. அதன்மேல் பாடகர்குழாம் சங்கீதம்ஒன்றைப் பாடத் தொடங்கவே குருசிரேஷ்டர்கள் பாப்பரசரது புனிதஉடலைப் பட்டினாற்செய்த பரிவட்டம்ஒன்றால் போர்த்துமூடியதும் சைப்பிறெஸ் மரப்பேழையின் மிகவும்பாரமான மூடியானது அதன்இருப்பில்வைத்து இறுக்கப்படலாயிற்று. இந்தமூடியின்மேல் சித்திரக்கொத்து வேலைப்பாடான ஓர்சிலுவை இருந்தது. மூடியைச்சுற்றிவரத் தாமிரவர்ணப் பட்டுநாடாக்கள்பொருத்தப்பெற்றுப் பரிசுத்தரோமான்கத்தோலிக்க திருச்சபையின் சேம்பர்லேனாகிய கருதினல் பெனெடெற்றோ அலோய்சி மசெல்லாஆண்டவரினதும், மற்றும்குருசிரேஷ்டர்களினதும் முத்திரைகள் அதிலே சித்திரிக்கப்பட்டிருந்தன.

### இரண்டாவதான ஈயப்பேழை

இந்தஆடம்பரமற்ற சைப்பிறெஸ்மரப்பேழை பின்னர் ஏறக்குறைய அரைத்தொன் நிறைகொண்ட பழுவான ஈயப்பேழை ஒன்றினுள் வைக்கப்பட்டது. வத்திக்கான் பணியாளர்கள் சாவதானமாகச் சரியானஇடத்திலே அதன்மூடியை எடுத்துவைத்துப் பொருத்திப் பேழையைமூடியபோது, கருதினல் சேம்பர்லேனும், ஏனையகுருசிரேஷ்டர்களும் விழிப்பாக அதைக்கவனித்தார்கள். மூடியின்மேல் ஓர்சிலுவை அழகிய சித்திரவேலைப்பாடுடைய தாய்க் கொத்தப்பட்டிருந்தது. அதன்கீழ் ஓர்சிலுவையாலும், கபாலஎலும்புகளாலும் மேற்கொள்ளப்பட்ட கேடயம்ஒன்று அமைந்திருந்தது. இதிலே பாப்பரசரதுவாழ்க்கையினதும், ஆளுகையினதும் ஆண்டு, மாதம், திகதிகள் பதிக்கப்பட்டிருந்தன. மீட்டும்மூடியின்மேல் தாமிரவர்ணப் பட்டுநாடாக்கள் முடிந்துகட்டப்பெற்று முத்திரையிடப்பட்டது.

### மூன்றாவது பேழை

ஈறுந்தமாக, விலைபெற்ற 'எல்ம' என்றமரத்தினாற்செய்து மெருகிட்டுமினுக்கிய அலங்காரமான பேழையில்வைத்துப் புனிதஉடல் மூடப்பட்டது. வெண்கலத்தால் செய்த இதன்மூடியிலே மாடப்புறுவும், ஒலிவம் கிளையுமாகிய பாப்பரசரது சின்னத்தோடு அவரின்விருதுமுத்திரை துலங்கிக் கொண்டிருந்தது. அதன்கீழ் வெண்கலக்கேடயம் ஒன்று லத்தீனிலே பின்வரும் கல்வெட்டைக் கொண்டிருந்தது.

"12-ம்பத்திநாத பாப்பரசரின் புனிதஉடல். அவர் 82வருடமும், 7மாதமும், 7நாளும் உயிர்வாழ்ந்திருந்தார். அவர் சாதாரண திருச்சபையைப் 19வருடமும், 7மாதமும், 7நாளும் ஆட்சிசெய்தார். 1958-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9-ந் திகதி காலஞ்சென்றார்".

## ஞானோபதேசப் பரீட்சை 19-11-58

நாலாம்வகுப்புத்தொடக்கம், எஸ். எஸ். சி. வகுப்புஈறாகஉள்ள கத்தோலிக்க பிள்ளைகளின் தொகையை வகுப்புவகுப்பாகக் குறித்து 3-11-58-க்குமுன் அனுப்பிவைக்கும்படி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

S. S. C., Prep. S. S. C., J. S. C. வகுப்புகளில் வேறுஞானோபதேசத் திட்டங்கள் பின்பற்றப்பட்டால் அவைஎவை யென்று விபரமாகக் குறிப்பிடவேண்டும்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools

Jaffna, 16-10-58.

## ஆசிரியமணிக்கு வரவேற்பு

மட்டக்களப்பு — தன்னாமுனை

4-10-58 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்கதலைவர், ஆசிரியமணி கே. எல். இராசேந்திரம்அவர்களைக் கௌரவிக்குமுகமாகத் தன்னாமுனைப்பங்குக்கத்தோலிக்கபாடசாலை ஆசிரியர்சங்கம் அர்ச். சூசையப்பர் பாடசாலை மண்டபத்தில் ஒருவரவேற்புஉபசாரம் நடத்தியது.

ஆசிரியமணி மாலைசூட்டி வரவேற்கப்பட்டார். வரவேற்புநிகழ்ச்சிகளிலே புகைப்படம்பிடித்தல், உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தல், சிற்றுண்டி விருந்துஎன்பன இடம்பெற்றன.

வண. ஜே. அலெக்சாண்டர்சுவாமியவர்களும், தலைவர் த. சி. இராயப்பு அவர்களும் ஆசிரியமணியைவரவேற்று உரைநிகழ்த்தினார்கள். திரிகோணமலை மேற்றிராசன கத்தோலிக்கபாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் வண. ஈ. கிறவுதர்சுவாமியவர்கள் ஆசிரியமணியைப்பாராட்டிப் பேசியதோடு, ஆசிரியர்கள் தங்கள்உரிமைக்காகப் போராடும்போது தங்கள்கடமையின் கண்ணியத்தையும், உயர்வையும் மனதிற்கொள்ளவேண்டும்; அப்போது தான் வருங்காலத்தில் நல்லபிரசைகளை ஆக்கலாம்; அவர்கள்மூலமே நாட்டில்சமாதானமும், சுபீட்சமும் நிலவுமெனக்கூறினார்.

ஆசிரியமணி தம்மைக்கௌரவித்ததற்காக நன்றிகூறியதோடு, எல்லாஆசிரியர்களும் கிளைச்சங்கங்களிற்சேர்ந்து தாய்ச்சங்கத்தோடு இணைந்துகொள்ள வேண்டுமென்றும், அப்போதுதான் நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்து வாதாடி உரிமைகளைப்பெறலாமென்றும் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில், கல்விமந்திரிகாரியாலம் மட்டக்களப்பு ஆசிரியகலாசாலையை மூடஎண்ணியிருப்பதானது மட்டக்களப்புத் தமிழ்மக்களை மிகுந்தகவலையுள்ஆழ்த்தியிருக்கிறது; மட்டக்களப்புத் தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்கான ஒரேயொருவழியைத் தடைசெய்வது பெரிதும்வருந்தத்தக்க செயலாகும்; ஆசிரியகலாசாலையை மூடப்படாது என்பதற்கான காரணங்களை அதிகம் விரைவில் கல்விமந்திரிக்கு எடுத்துக்கூறி அதைமூடாதிருக்க நடபடிக்கை எடுப்பதுடன் மட்டக்களப்பில் ஒரு தொழிற்கல்விப்பாடசாலையையும் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்போம்; இதுவிஷயமாய்க் கல்விமந்திரி பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளுவாரென நம்புகிறோம்எனக்கூறினார். ஈற்றில் காரியதரிசி நன்றியுரைகூறினார்.

—நிருபர்.

## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். மருதமடுச் செபமாலைமாதாவின் இரக்கத்தால், நான்இழந்தபொருள் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

பாண்டியன்தாழ்வு பி. ஏ. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் காலஞ்சென்றார்

## பாப்பரசர் நீடூழி வாழ்க!

"பாப்பரசர் காலமாயினர். பாப்பரசர் நீடூழிவாழ்க." ரோமைச்சக்கிரவர்த்திகளின் காலமுதல் இன்றுவரை பல நூற்றாண்டுகளாக நீடித்திருக்கும் ஒரேயொருஅரசாங்கமுறையின் தலைவராக ரோமாபுரிஸ்தானத்துக்குத் தொடர்ந்து 263-வதுபாப்பரசரைத் தெரிவுசெய்யவேண்டியகாலம் வந்துவிட்டது.

12-ம்பத்திநாதபாப்பரசர் ஏலவே நல்லடக்கம் செய்யப்பெற்றுவிட்டார். அவரின் பதிலாளிஒருவரைத் தெரிவுசெய்வதற்கெனக் குறிக்கப்பட்டிருக்கும் ஐப்பசிமாதம் 25-ந்திகதியன்று கூடவிருக்கும் கருதினல்மாரின் திருக்கூட்டத்திற்கான ஆயத்தங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன. ஓர்பாப்பானவரின் மரணத்துக்கும், அவர்பதிலாளியின்தேர்தலுக்கும் இடைப்பட்ட காலம் "செடெவக்கான்ரே" என அழைக்கப்படுகிறது. பாப்பானவரின்ஸ்தானம் காலியாயிருக்கும் இந்தக் காலத்தில் கருதினல்மாரே பாப்பானவரதுஅதிகாரத்தின் பரிபாலனர்—அதாவது தர்மகர்த்தாக்கள் ஆகின்றனர். என்றாலும், இந்தஅதிகாரத்தை அவர்களால் செலுத்திக்கொள்ளமுடியாது. கருதினல் கமார்லென்கோவாகக் கருதினல் பெனெடெற்றோ அலோய்ஸி மசெல்லாஆண்டவர் இந்த அதிகாரபதவிக்குக் கருதினல்மாரின் திருக்கூட்டத்தாலே சென்ற 9-ந்திகதியன்றுதெரிவுசெய்யப்பெற்று, பரிசுத்தஸ்தானத்தின் பரிபாலனத்தைக் கையேற்றுக்கொண்டபோதிலும் பாப்பரசரின்பதிலாளியைத் தெரிவுசெய்யும்கடமை கருதினல்மார் திருச்சங்கத்திலேயே சுமந்ததாகும். தற்போது 54கருதினல்மார் இருக்கின்றனர். இவர்களில் ஏறக்குறைய மூன்றில்ஒருபங்குபேரே (17) இத்தாலியர்கள்.

பாப்பானவரின்ஸ்தானம் காலியாயிருக்கும் காலத்திலே கருதினல்மார் பாப்பரசரைத்தெரிவுசெய்யும் திருக்கூட்டத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் சித்தஞ்செய்யுமாறு நாளாந்த பொதுக்கூட்டம் நடத்திவருகிறார்கள். இவ்விதம்அவர்கள் பத்துப்பொதுக்கூட்டங்கள் நடத்துவார்களென நம்பப்படுகிறது. உதாரணமாக, 3-ம்நாள் கருதினல்மார் திருக்கூட்டத்திற்கென அறிக்கையாளராகும் குருவானவர்ஒருவரை அவர்கள் தெரிந்தார்கள். 4-ம்நாள் வைத்தியர்கள், மருந்துதயாரித்துக் கொடுக்கிறவர்கள், அவர்களின் துணையாளரைத் தெரிந்தார்கள். 5-ம்நாள் நாவிதர்களையும், ஏவலாளரையும், சேவைசெய்வோரையும் தெரிந்தார்கள். 6-ம்நாள் திருக்கூட்டம் நடைபெறுங்காலத்திலே கருதினல்மார் தங்கியிருக்கவேண்டிய அறைகளைத் திருவுளச்சீட்டுமூலம் தெரிவுசெய்தார்கள். 7-ம்நாள் உணவுவழங்குவதுபற்றிக் கலந்தாலோசித்துமுடிவுசெல்தார்கள். இவ்விதமே ஏனையதினங்களிலும் ......கருதினல்மார் ரோமாபுரிபோய்ச்சேர்ந்தநேரமுதல் புதியபாப்பானவரைத் தெரிவுசெய்தற்கான ஆயத்தங்களையே செய்யத்தொடங்கினார்கள்.

### ஐப்பசி 25-ந்திகதி

நிகழும் ஐப்பசிமாதம் 25ந் திகதியாகிய நாளைநின்றுவரும் சனிக்கிழமையே அடுத்தபாப்பரசரைத் தெரிவுசெய்கின்ற கருதினல்மார் திருக்கூட்டத்தின் ஆரம்பதினமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அன்றுதினம் கருதினல்மார் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே திவ்வியபூசைகண்டபின் சிஸ்ரைன்சிற்றாலயத்திற்குச் சுற்றுப்பிரகாரமாகச் செல்வார்கள். மணிகள் அடிக்கப்படும்போது அவர்களின் திருக்கூட்டத்திற்குச் சேராதவர்கள் அச்சிற்றாலயத்தைவிட்டு வெளியேறிவிடவேண்டும். ஒவ்வோர் கருதினல்மாரும் தத்தமக்கெனக் குறிக்கப்பட்ட அறையை ஆதீனப்படுத்திக்கொள்ளுமுன் அனுமதியில்லாதபேர்கள் இருக்கிறார்களாவென்றுபார்க்க அறைகளெல்லாம் ஆராய்ந்து பரிசோதனைசெய்யப்படும். அதன்மேல் அவற்றின்கதவுகளும், திருக்கூட்டம்நடந்தேறும் பகுதியிலுள்ள ஏனையபிரவேசவாயில்களும் சுவரிட்டு அடைக்கப்படும். சன்னல்களினூடாக எவரேனும் ஏதும்சாடையைக் கினைகாண்பிக்கக்கூடும் அன்றேல் ஏதும் செய்தியைக் களவிலேகொண்டுபோகக் கூடுமென்று அந்தச் சன்னல்களெல்லாம் முத்திரையிட்டுப் பார்க்கமுடியத வர்ணங்கொண்டு பூசிமறைக்கப்படும். தெலிபோன்கள் நிறுத்திவிடப்படும். புத்தகங்களோ அன்றேல் புதினப்பத்திரிகைகளோ வெளியிலிருந்துஅனுப்ப அனுமதிக்கப்படமாட்டாது. மூன்று சுழலும்வாயில்கள் வழியாகவே கருதினல்மாரின்திருக்கூட்டத்துக்கு உணவுகள் அனுப்பப்படும் ஆனல், இந்தவாயில்கள் எவராவது உள்ளிருந்து கள்ளத்தனமாகவெளிச்செல்ல, அன்றேல் வெளியிலிருந்து உட்செல்லப் போதிய அத்துணைப்பெரியன அல்ல. கருதினல்மாரின்வாக்குகளில்மூன்றில்இரண்டையும், மேலதிகமாகஒன்றையும் பெற்றுக்கொள்ளும்போதே புதியபாப்பரசர் தெரிவுசெய்யப்படுவார்.

காலஞ்சென்றபாப்பரசர் முதலாவது வாக்கெடுப்பில் அதிகமானவாக்குகளைப் பெற்றுக்கொண்டபோதிலும் வேண்டப்பட்ட மூன்றில்இரண்டுவாக்குகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. இரண்டாவதுவாக்கெடுப்பில் வேண்டப்பட்ட பெரும்பான்மை வாக்குகளைக்காட்டிலும் அதிகமானவைகளை அவர்பெற்றுக்கொண்டார். ஆனல், அவர் மறுபடியும் வாக்களிக்குமாறு மற்றவர்களைக் கேட்டுக்கொண்டார். இடைப்பட்ட ஓய்வுநேரத்திலே அவர் தமது'பிறிவியறி'யை வாசித்துக்கொண்டிருப்பவராயும், ஆழ்ந்தமனக்கலக்கமடைந்தவராயும் காணப்பட்டார். மூன்றாவதுவாக்கெடுப்பிலே அவருடைய வாக்குச்சீட்டு ஒன்றுமாத்திரமே மற்றொருவருக்குப் போடப்பட்டிருந்தது. மற்றவைகளெல்லாம் அவருக்கேபோடப்பட்டிருந்தன.

---

### ஸ்ரீமதிஞானம்மா பிலிப்புப்பிள்ளையின்

## தேகவியோகம்

கரவெட்டியை ஜனனபதியாகக் கொண்டவவும், அங்கே அர்ச். அந்தோனியார்கோவிற் பங்கைச்சேர்ந்தவவுமான ஸ்ரீமதிஞானம்மா பிலிப்புப்பிள்ளை சென்ற வெள்ளிக்கிழமை காலஞ்செல்லலாயினு. இவ காலஞ்சென்ற வண. சந்தியாசுவாமியவர்களின் மருமகளும், வண. மி. நீக்கிலாஸ்சுவாமியவர்களின் சகோதரியுமாவர். புற்றுநோயாற் பீடிக்கப்பட்டிருந்த இவ தனது வருத்தத்தைப் பொறுமையோடுசகித்துக் கடைசித்தேவதிரவிய அனுமானங்களைப் பூரணஅறிவோடுபெற்றுப் பரமபதமடையலாயினு. இவவின் பிரேதசேமம் அடுத்தநாள் சனிக்கிழமை காலை 8மணியளவில் சிறப்பாகநடைபெறலாயிற்று. இவவின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக அன்றுகாலை ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. திரளான பந்துமித்திரர்முதலியோர் புடைசூழ இவவின் சகோதரரான சுவாமியவர்கள், வண. கட்டளைக்குரவர், வண. பி. ஈ. அல்பிறெட், வண. என். யோசேப்புசுவாமிகள் சஙிதமாய்த் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, பிரேதப்பேழை சகலவரிசைகளுடனும் சேமக்காலையை அடைந்து அங்குகூடியிருந்தசகலரும் இறுதி மரியாதையைச் செலுத்திநிற்க, சகோதரரான நீக்கிலாஸ் சுவாமியவர்கள் அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம்கூறியதும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

R. I. P.

---

## பாப்பரசர் மறைவு

— அமுது —

சத்தியத்தின் குடைபிடித்த வேந்தன்; ஞானச்
சமுத்திரத்தின் மீகாமன்; உலகைக்கவ்வி
எத்திசையும் இடர்புரியும் இரும்புக்கையின்
எதிராளி; கலைஞானி; தூயோன்; அன்று
நித்தியத்தின் அன்பரசன் அமைத்த கல்லில்
நீதிசமா தானமெனும் கொடியை ஏற்றிப்
புத்திரர்கள் நாற்பத்து ஐந்துகோடி
புலம்பிடவே மறைந்ததென்ன புதுமைதானே!

●

பொன்னிதயத் தளபதியே! உலகநீதி
புழுவெனவே அழித்துவரும் ஆஸ்திகத்தின்
மின்னுகின்ற வாளெனவே விளங்கிவந்தாய்
வெற்றியுடன் தொண்டுசெய்தாய்; கன்னித்தாய்க்குப்
பொன்னுலகை ஒப்படைத்தாய்; மனிதவாழ்வு
போலிவழி செல்லுகையில் தடுத்துவைத்தாய்
பன்னிரண்டாம் பாப்பரசே! இவற்றுக்கெல்லாம்
பலனளிப்பான் பரமனந்தப் பதியிலன்றோ!

---

### யாழ்ப்பாண மேற்றிராசனக் கோவிலில்

### பாப்பரசரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக

# மகா துக்கப்பாடற்பூசை

யாழ்ப்பாணம், பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே காலஞ்சென்ற 12-ம்பத்திநாதபாப்பரசரின் ஆன்மசாந்திக்காக நம்மேற்றிராணியாண்டவர்அவர்களால் சென்ற 15-ந்திகதி புதன்கிழமைகாலை ஓர்மகா துக்கப் பாடற்பூசை நிறைவேறியது. அன்றுதினம் இங்குள்ள அரசாங்ககட்டடங்களிலெல்லாம் துக்கத்தின் அறிகுறியாகக் கொடிகள் அரைக்கம்பத்தில் இறக்கிப் பறக்கவிடப்பட்டிருந்தன. காலஞ்சென்ற பாப்பரசரைக் கௌரவிக்குமுகமாக யாழ்ப்பாண நகரசபைக் கட்டடம் காலை10மணிவரை மூடப்பட்டிருந்தது. நம்மேற்றிராணியாண்டவர் காலை7மணிக்கு மேற்றிராசனமாளிகையிலிருந்து குருமார், குருத்துவ மாணவர், பாப்பரசரின் நைற்பட்டவர்த்தனர் சமேதராய் ஆலயமணிகள் துக்கநாதஞ்செய்யக் கறுப்புவஸ்திரங்களாலே துக்ககோலம்பூண்டிருந்த ஆசனக்கோவிலுக்கெழுந்தருளித் துக்கப்பாடற்பூசையை நிறைவேற்றினர்.

அப்போது யாழ்ப்பாணக்குடாநாட்டின் பல்வேறு விசாரணைப்பங்குகளிலுமிருந்துவந்த சுமார் 35 குருப்பிரசாதிகளும், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரும, யாழ்ப்பாணமேயர் திரு. அல்பிறெட் துரையப்பாஅவர்களும், நகரசபை அங்கத்தவர்களும், அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்களும், டிஸ்திறிக்நீதிபதி திரு. எஸ். ஸ்ரீகந்தராஜா அவர்களும், நீதிபதி திரு. பி. ஜி. எஸ். டேவிட்அவர்களும், பல்வேறு கல்லூரிகளின் தலைவர்களும், அரசாங்க காரியாலயங்களின் தலைவர்களும், யாழ்நகரிலுள்ள மற்றும்பிரமுகர்களும், கலாசாலைப்பிள்ளைகளும், விசுவாசிகளுமாகத் திரளானமக்கள் கோவிலில் தேங்கியிருந்தார்கள். அழைப்புக்கிணங்கி வந்தபிரமுகர்களையெல்லாம் ஆசனக்கோவில்கட்டளைக்குரவர் வண. சி. ஜோண்மேரி சுவாமியவர்களும், மற்றுஞ்சில பெரியாரும் வரவேற்றுநின்றார்கள்.

பூசைமுடிவிலே கொழும்புத்துறை ஆசிரியகல்லூரிஅதிபர் வண. பி. தீயோகுப்பிள்ளை சுவாமியவர்கள் "உத்தம ஆசீர்வாதங்களினல் நீர்அவரை முன்வந்துநிரப்பினீர்; அவருடையசிரசில் ஓர்பசும்பொற்கிரீடத்தைச்சூட்டினீர்" (20-ம்சங். 3-ம்வசனம்) என்றவசனத்தை ஆரம்பவாக்கியமாகக்கொண்டு, காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாப்பரசரின் சீரியவாழ்க்கையையும், அவர் பொதுவாக முழுஉலகத்துக்கும், சிறப்பாகக் கத்தோலிக்கதிருச்சபைக்கும் ஆற்றியிருக்கும் போற்றற்பால அருஞ்சேவைகளையும் எடுத்துக்காட்டி உணர்ச்சிததும்பும்படியாக அரிய தோர்பிரசங்கஞ்செய்தார். ரோமாபுரியிலே தாம்வேதசாஸ்திரம்கற்றுவந்த ஆறுவருடங்களிலும் அவரைப்பற்றித் தாம்கண்ணாரக்கண்டும், காதாரக்கேட்டுமுள்ள சம்பவங்களை எடுத்துக்கூறி, இரவிலேஎல்லோரும் கண்ணுறக்கம் கொள்ளும்சமயம் நமதுபரிசுத்தபிதா கண்ணுறங்காது நீடியசெபத்திலே ஆழ்ந்து நிலைத்திருக்கும் சம்பவத்தை உருக்கமாகஎடுத்துக்கூறி எல்லோரையும் கண்கலங்கச்செய்தார். ஆழிய சமுத்திரம்போலும்ஆழியதும், அகன்றுபரந்ததுமான பாப்பரசரின் வாழ்க்கைத்துறையில் கால்வைத்திறங்கிக் காலநேரம்காணுது, அதனல் கரைதுறைகாணமுடியாது தத்தளிப்பார்போன்று இரண்டொருகால் காட்சியளித்தார் சுவாமிகள். ஈற்றில் நிகழும்20-ம்நூற்றாண்டிலே திருச்சபைகண்ட பெரியபாப்புமார்களிலே காலஞ்சென்ற 12-ம்பத்திநாதபாப்பரசர் கல்விகலைக்கியானங்களில் சிறந்துபோறிஞராய்விளங்கிய 13-ம்சிங்காராயபாப்பானவரைப்போல் ஓர்பெரியகல்விமானென்றும், 10-ம்பத்திநாத பாப்பானவரைப்போல் பெரும்பக்திமானென்றும், 15-ம்ஆசீர்வாதப்ப பாப்பானவரைப்போல் சிறந்த அரசியல் ஞானம் உடையவரென்றும், 11-ம்பத்திநாத பாப்பானவரைப்போல் பெரிதும்அஞ்சாநெஞ்சம் படைத்தவரென்றும், அதனல் கத்தோலிக்கதிருச்சபை பெரியகல்விமானும், பெரியபக்திமானும், பெரியஅரசியல்ஞானியும், அஞ்சாநெஞ்சம்படைத்த பெரும்வீரனுமான அரும்பெரும் பாப்பரசர் ஒருவரைஇழந்து துக்கசாகரத்தில் ஆழ்ந்துகிடக்கின்றதெனக்கூறித் தமதுபிரசங்கத்தைமுடித்தார்.

அதன்மேல் ஆண்டவர் அவர்கள் குருமார்சமேதராய் மேடைப்பேழையண்டைசென்று மரித்தோருக்கான செபங்களைச்செபித்து, சங்கீதங்களைப்பாடி அந்திமதிருச்சடங்குகளைநிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம் கூறிநின்றார். ஈற்றில் துக்கப்பாடற்பூசைக்குச் சமுகமளித்திருந்த பிரமுகர்களுக்கெல்லாம் அவர் நன்றிதெரிவித்ததுடன் வைபவங்கள் நிறைவாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவீரர் பக்கம்





**அருமைச் சகோதரங்களே!**

உலகத்தில் பலர் மக்கள்அனைவரையும் ஒருகுடையின்கீழ் அடக்குவதற்கு முயற்சிக்கின்றனர். தேசத்தலைவர்களிற்சிலர் பிறதேசங்களைத் தமதுஆட்சிக்குள் கொண்டுவருவதற்காகப் பலபுரட்சிவழிகளைக் கைக்கொள்ளுகின்றனர். அதற்கு மனிதஉயிரைப் பலிகொடுக்க வேண்டுமென்றாலும் பின்வாங்குகிறதில்லை.

இத்தகைய தீயொழுக்கவழிகளால் ஆட்சிபெற்றவர்கள் அமைதியடைகிறார்களா? அதுதான் இல்லை. யார் தமக்குத் துரோகம் விளைக்கிறார்களோ, யார் தம்மைச் சிம்மாசனத்திலிருந்து தள்ளிவீழ்த்திவிட்டு முடிசூடப் பார்க்கிறார்களோ எனச் சதா கவலையாயிருக்கிறார்கள்.

கிறீஸ்து தேவஅரசர் எம்மை ஆளவந்தார். உலகஅரசர் ஆளுவதுபோல அன்று. தமதுஉண்மையினால் எமதுபுத்தியையும், தமது அன்பினால் எமது சித்தத்தையும் ஆளவிரும்புகிறார். எமது உள்ளத்தில் அரசுசெலுத்த ஆசிக்கிறார்.

மக்கள் ஒவ்வொருவரதும் உள்ளத்தைப் புனிதப்படுத்தி ஆட்சிபுரிவதினால் தமதுஆட்சியை உலகில் செலுத்தவிரும்புகிறார். மனது பொருந்தி விரும்புகிறவர்களே இவ்வாட்சியில் இருப்பர். கிறிஸ்துவின் உண்மைகளே உலகின்ஒளி. இவ்வொளியில் மக்கள் தமதுகதியையும், அதைஅடையும் வழியையும் அறிவர். கிறிஸ்துவின் அன்பே மக்கள் குலத்தை ஒன்றாக்கும். உண்மைச்செல்வம் தரித்திரம்; உண்மைஉயர்ச்சி தாழ்மை; உண்மைநயம் பரகதிஎன உலகம் அறிந்தால்தான் உய்வுபெறும்; சமாதானம் நிலவும்.

எனவே, உலகமக்கள் கிறிஸ்துவின் ஒளியைப்பெற்று, அவருடைய அன்பில் வாழ்ந்து வளம்பெறல்வேண்டும். கிறிஸ்து தேவஅரசர் வாழ்க! அவருடைய இராச்சியம் வருக!

அண்ணா.

—✳—

## உன்பெயர் மோட்சத்தில் எழுதப்பட்டிருக்கிறதா?

குழந்தை யேசுவின் சிறியபுஸ்பத்தைப்பற்றி அறிந்திருக்கிறீர்கள். தெரேஸ்என்பது அவளுடையபெற்றோரால் சூட்டப்பட்ட பெயர். இவள் சிறுமியாயிருக்கும்போது மாலைவேளைகளில் தன்அப்பாவுடன் உலாத்தப்போவாள். மாலைவேளை ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னிப்பிரகாசித்துக்கொண்டிருப்பது இயற்கை. அவைகள் திரண்டிருப்பதால் பல பல வடிவங்கள் காணப்படும். ஒருநாள் மாலை வழக்கம்போல் உலாவிக்கொண்டிருக்கும்போது ஆகாயத்தில் தனது பெயரின் முதல்எழுத்துப் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். உடனே ஆனந்தத்தினால் கூத்தாடினாள்.

"அப்பா! அப்பா! அதோபாருங்கள் என்பெயர் மோட்சத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது" என்று தகப்பனுக்குக் காட்டினாள். ஆம், தெரேசம்மாளின்பெயர் உண்மையாகவே மோட்சத்தில் எழுதப்பட்டிருந்தது. அவள் சிறுவயதிலிருந்தே அர்ச்சியசிஷ்டதனமுடையவளாக வளர்ந்துவந்தாள். அவள் குற்றமொன்றும் செய்யாமலே இருந்தாள்என்று நீங்கள் எண்ணுவீர்கள். இல்லை, அவளும் குற்றங்கள் பல செய்தாள் ஆனால், அவற்றிற்கு உடனே பரிகரிப்புச்செய்வாள். அவளுடைய தாதி விக்ரோறியா ஏதும் தனக்கு விருப்பமில்லாதவற்றைச் செய்துவிட்டால் தெரேஸ் காலை நிலத்தில் உதைந்து "நீ கொடிய விக்ரோறியா" என்று குமுறுவாள். ஆனால், உடனே குழந்தையுள்ளம்மாறி மன்னிப்புக்கேட்பாள். எப்போதும் குழந்தைபோல் இருந்ததினால் ஒருபெரிய அர்ச்சியசிஷ்டவளானாள்.

---

✳ 12-ம்பத்திநாதர் எப்போதுபாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார்?

1939-ம்ஆண்டு பங்குனிமாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை தமதுஜனனதினமாவன்று தெரிவுசெய்யப்பட்டார்.

## ஜேர்மெயின் ஆசிரியர்

ஏறக்குறைய மூந்நூறு ஆண்டுகளுக்குமுன் பிரான்ஸ்தேசத்தில்ஜேர்மெயின்என்ற ஒருசிறுமி இருந்தாள். அவள் மிகவும் வறியகுடும்பத்தில் பிறந்தவள். அதனால் பாடசாலைக்குப் போகாமல் தன் தகப்பனின் ஆடுகளை மேய்க்கவேண்டியவளானாள். ஒவ்வொருநாளும் அதிகாலையில்எழுந்து ஆட்டுமந்தைகளை ஓட்டிக்கொண்டு வீட்டிலிருந்து வெகுதூரம்நடந்து செல்லுவாள். மத்தியானப்போசனத்துக்காகக் காய்ந்த உரொட்டித்துண்டைக் கொண்டுபோவாள். அதையும் தான் சந்திக்கும் பிச்சைக்காரருக்குப் பங்கிடுவாள்.

இவள் சந்தோஷமாகச் சீவிக்கவில்லைஎன்று எண்ணுவீர்கள். இவள் பாடசாலைக்குப் போகாததினால் ஞானோபதேசம் தெரியாதவள் என்று எண்ணுவீர்கள். அப்படியல்ல. தூயஆவியானவரே இயற்கையைக்கொண்டு இவளுக்கு ஞானஅறிவை ஊட்டிவந்தார். உலகில்உள்ள ஒவ்வொரு பொருளும் கடவுளின் நன்மைத்தனத்தை அவளுக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தன. சூரியன் அவளுக்கு உற்சாகமும், பூரிப்புமளித்தது. அவரது மரங்கள் வெய்யில்வேளைகளில் அவளுக்கு நிழல்கொடுத்தன. பறவைகள் தங்கள் பாட்டினால் அவளை மகிழ்வித்தன. பூக்கள் தங்கள் நிறங்களினாலும், வாசனையினாலும் அவளை வசியப்படுத்தின. வெட்டவெளியான மைதானங்களில் முழந்தாளிட்டுச் செபிப்பாள். அவள் இருதயம் தேவனைநேசிப்பதிலும், அவருக்கு நன்றிசெலுத்துவதிலும் ஈடுபட்டிருக்கும். எப்படிச் செபிக்க வேண்டுமென தூய ஆவியானவர் அவளுக்குப் படிப்பித்தார். அதனால் அவள் தேவநேசத்தில் அதிகமதிகம் வளர்ந்து ஓர் அர்ச்சியசிஷ்டவளானாள்.

# திறந்து விட்டவன்

அவனது வேலை மோட்டர்லொறி ஓட்டுவது. அதிகாலையிலே சாமான்களை ஏற்றிக்கொண்டு தூரத்தில் இருந்த ஒரு நகருக்குச் செல்வான். மாலைவேளையில் அங்கிருந்து புறப்பட்டு ஊர்வந்து சேர்வான். ஒவ்வொருநாளும் அங்கு போய்வந்தமையால், பாதையோரத்திலிருந்த ஒவ்வொரு சிறுகிராமமும், வீடுகளும் அவனுக்கு மனப்பாடம். எனினும், வழியிலிருந்த ஒருவீடு அவனுடைய கவனத்தைக் கவர்ந்துவந்தது. மாலை நேரத்தில் அவனுடைய லொறி அவ்வழியாய் வரும்போதெல்லாம் ஒரு சிறுவன் அந்த வீட்டு வாசலில் நிற்பான். அவனுக்கு வயது 11 இருக்கும். தலைஉரோமம் பொன்நிறமானது. அவன் நாள்தவறாமல் மாலை நேரத்தில் வீட்டின் வாசல்பக்கம் வந்து லொறிச் சாரதிக்கு வந்தனங்கூறிக் கரத்தை அசைப்பான். சாரதியோ நாள்தவறாமல் மிட்டாய் முதலிய தின்பண்டங்களை வீசுவான். சிறுவன் மிக மகிழ்ச்சியுடன் அதை எடுக்கவருவதைக்காண்பது சாரதிக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. எட்டுமாதங்களாக நாள் தவறாமல் இவ்வித உபசாரம் நடைபெற்றுவந்தது. சாரதிக்கும், சிறுவனுக்கும் இது வழக்கமாகிப் போய்விட்டது. ஆனால், இருவரும் எப்போதாவது பேசியது கிடையாது.

ஒருநாள் மாலையில் சிறுவனை அங்கே காணவில்லை. மாலை வந்தனங்கூற வீட்டுவாசலில் ஒருவரும் இல்லை. சாரதிக்கு அன்று ஏதோ ஒருபெருங்குறைவு ஏற்பட்டாற்போல் தோன்றிற்று. அந்தச்சிறுவனின் புன்சிரிப்பானது அவனது பிரயாணத்தில் இதுவரை அலுப்புத்தோன்றாதபடி செய்துவந்தது. தனிவாசியான அவனதுவாழ்வில் சிறுவனதுதோற்றம் ஒருஇன்பத்தைக் கொண்டுவந்தது. இன்றோ அவனைக்காணோம்.

ஒருவாரமாகச் சிறுவன் காணப்படவில்லை. விஷயத்தை விசாரிக்கச் சாரதிதீர்மானித்தான். மறுமுறையாவது அந்தப்பக்கம் வரும்போது லொறியைநிறுத்தி, வீட்டில்கேட்கவேண்டும். ஒருவேளை அவனுக்கு வியாதியாய் இருக்கலாம். வீட்டில் உள்ளவர்களைச் சாரதி அறியமாட்டான்; உண்மைதான். அந்நியன் ஒருவன்வந்து தங்கள்மகனைப்பற்றி விசாரித்தால் அவர்கள் சினங்கொள்ள மாட்டார்கள் என்பதுநிச்சயம்.

மறுநாள் லொறியை வெளியே நிறுத்திவிட்டு வீட்டின் கதவை அவன் பயத்துடன் தட்டினான். ஏறக்குறைய முப்பத்தைந்து வயதினளான ஒருபெண் கதவைத்திறந்தனள். தான் யாரென்றும் வந்த காரணத்தையும் தெரிவித்து, தொந்தரவு கொடுத்ததற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். அந்தப் பெண்ணின்முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது. "ஐயா, நீங்கள் வந்தது பற்றிமெத்தச்சந்தோஷம், உங்களைப் பார்த்ததும் ஜிம்மி வெகுஆனந்தங்கொள்வான். நாளெல்லாம் உங்களைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறான். தயவுசெய்து உள்ளே வாருங்கள்" என அவள் மொழிந்தாள். வீடுசிறிதுதான், எனினும் சுத்தமாயிருந்தது. ஒருஅறையில் யேசுவின் திருஇருதயச்சுரூபம், அதன் முன் ஒருசிறு சிவப்புவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவனுள்ளத்தில் ஒரு அபூர்வ உணர்ச்சி ஏற்பட்டது. இவ்வித விளக்கை அவன் பார்த்து அநேக ஆண்டுகளாகிவிட்டன. அதைப் பார்த்ததும், பலகாட்சிகள் அவன் கண்முன் தோன்றின. இளவயதில் அவன் வசித்தவீடு, யேசுவின் திருஇருதயச் சுருபம், சிவப்புவாடாவிளக்கு, ஒவ்வொரு இரவும் சொல்லிவந்த குடும்பசெபமாலை இவையாவும் அவன் கண்முன் தோன்றி மறைந்தன.

வீட்டின்பின்பக்கத்திலிருந்த அறைக்கு அவனை அந்தப்பெண் இட்டுச்சென்றாள். பொன்னிற ரோமத்தையுடைய சிறுவன் அங்குபடுத்திருந்தான். ஒருவாரத்தில் எவ்வளவோ மாறிவிட்டான். ஒரே பார்வையில் உண்மை நிலை விளங்கிவிட்டது. அவன் நெடுநாள் இவ்வுலகில் இருக்கமாட்டானென யாரும் சொல்லிவிடுவர். அவனைக் கண்டதும் சிறுவன் புன்னகை காண்பித்தான். "நீங்கள் வருவீர்கள்என எனக்குத் தெரியும். உங்களை இங்கு அனுப்பிவைக்கும்படி யேசுவின் திருஇருதயத்தையும், தேவதாயாரையும் பார்த்துப் பிரார்த்தித்தேன். என் மன்றாட்டுக்கு அவர்கள் இல்லை என்னமாட்டார்கள்என எனக்குத் தெரியும். உட்காருங்கள். உங்களுடன் பேச ஆசையாயிருக்கிறது" எனச் சிறுவன் கூறினான்.

சிறுவனண்டையில் அவன் உட்கார்ந்ததும் பேசமுடியாதபடி தொண்டையில் அடைத்தாற்போல் இருந்தது. அவன் தேவதாயை நோக்கிச் செபித்து எவ்வளவு காலமாயிற்று! அதுமுதலாய் அவனுக்கு ஞாபகமில்லை. அவனுக்கு முன் இதோ பதினொரு வயதுச் சிறுவன் கிடக்கிறான். ஆதிகாலத்து அப்போஸ்தலர்களிடமிருந்த விசுவாசம் அவனிடம் இருக்கிறது! யேசுவின் திருஇருதயமும், தேவதாயும் அவனுடைய மன்றாட்டைக் கேட்பார்கள் எனத் திடமான நம்பிக்கைகொண்டிருக்கிறான்.

"நீங்கள் கத்தோலிக்கரா?" என சிறுவன் வினவினான். "ஆம் ஜிம்மி, நான் கத்தோலிக்கன் தான். ஆனால்..." தான் கத்தோலிக்கன் என்றாலும் அநேக ஆண்டுகளாக மதாப்பியாசத்தையே விட்டுவிட்டதைத் தெரிவிக்க அவன் நினைத்தான். ஆனால், சாகக்கிடந்த சிறுவனை மனம் நோகப்பண்ண மனதின்றி அப்படியே நிறுத்திவிட்டான்.

"பென்றன் சுவாமியார் எனக்கு திவ்விய நற்கருணை கொடுக்கும்படி வெள்ளிக்கிழமையன்று வருகிறார். அம்மாவும் நன்மை வாங்கப்போகிறார்கள். என்னைத் தனியே விட்டு, அவர்களால் கோவிலுக்குச் செல்ல முடியாது, ஆதலின் வீட்டிலேயே நன்மைவாங்க விசேஷ உத்தரவு பெற்றிருக்கிறார்கள். நாங்கள் திவ்வியநற்கருணை உட்கொள்கையில் நீங்களும் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்றான்சிறுவன்.

சாரதியின் கண்களிலிருந்து நீர் வடிந்தது. "ஆம். ஜிம்மி, நான் வருவதாக வாக்களிக்கிறேன். அதிகாலைப் பூசையில் நானும் திவ்வியநற்கருணை வாங்கிவிட்டு வருவேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழக்கிழமை மாலையில் பென்றன் சுவாமியார் கட்டளைசெபத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். யாரோ பார்க்கவந்திருப்பதாக வேலைக்காரன் தெரிவித்தான். அவனுக்கு வயது அறுபதிருக்கும். நேரே வேலையிலிருந்து வந்திருந்தான். "சுவாமி நான் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டும்" என அவன் சொன்ஞன்.

ஒருமணி நேரத்துக்குப்பின் அவன் அவரை விட்டுப் பிரிந்தான். மனந்திரும்பித் தபசுசெய்த பாவியினிமித்தம் கடவுளுடைய சம்மனசுக்கள் பரகதியில் சந்தோஷம் கொண்டாடின. எத்தனையோ ஆண்டுகளாக உண்மை அமைதியும், சந்தோஷமும் அனுபவித்திராத ஒருஆத்துமத்தினுள் மறுநாள் அதிகாலையில் அதன் இரட்சகர் நுழைந்தார்.

சிறுவனின் படுக்கையருகில் மூவர் ஆண்டவரது வருகைக்காகக் காத்திருந்தனர். கலிலேயாக் கடலில் நடந்துசென்றவர், நோயாளிகளைக் குணப்படுத்தியவர், அவர்கள் மத்தியில்வர இருந்தார். நித்தியத்துக்குள் நுழைய இருந்த ஒரு ஆத்துமத்தின் பிரயாணத்தில் அதற்கு வழித்துணையாகும்படி சிவியஅப்பமே அங்கு வந்தார். அவரது மாசற்ற தாய்க்குக் கொடுக்கப்பட்ட சிலுவையை அவள் கல்லறைக்குச் சுமந்து சென்றதுபோல், ஒரு தாய்க்கும் அவளது சிலுவையைச்சுமக்கப்பலம் அருளப்பட்டது. மனஸ்தாபப்பட்ட பாவி தான் பெற்ற மன்னிப்பின் குறியையும் பார்த்தான். கிறீஸ்துநாதர் அப்பத்தின் குணங்களுக்குள் தாழ்ச்சியுடன் அங்கு வந்தார். சிவியரான கிறீஸ்துநாதர், நித்தியரான யேசு, அபிரகாம், ஈசாக், யாக்கோபு இவர்களின் தேவன் அங்கு வந்து "இன்று நான் இந்தவீட்டில் தங்க வேண்டும்" என்ருர்.

இரு பட்டணங்களுக்கிடையே ஒரு கல்லறைத் தோட்டம் இருக்கிறது. ஒவ்வொருநாளும், பெரும் பாரமேற்றிய ஒருலொறி அதன்முன் நிற்கிறது. சாரதி இறங்கி ஒருகல்லறைமீது புதுப்பூக்களைத் தெளித்து முழந்தாளிட்டுச்செபிப்பதை மக்கள் பார்க்கிருர்கள். கடவுளுடைய நகரமாகிய மோட்சத்தின் வாசலைத் தனக்குத் திறந்துவிட்ட பொன்னிற உரோமச்சிறுவனைப்பற்றிநினைத்துக் கொண்டே சாரதி வெளியேறி மோட்டாரில் அமர்கிருன்.

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**ஜனனதினவிழா :**

ஐப்பசித்திங்கள் 2-ம்நாள் ஆரவாரத்தோடு புலர்ந்தது. நமதுஆலயத்தில் எள்ளிடஇடமின்றிக் கிறீஸ்தவர்கள், பக்திச்சபையினர், கிளென்னி ஆண், பெண்பாடசாலையினர், அன்பர்கள் முதலானோர் குழுமியிருந்தனர் தமது 44-வது பிறந்ததினபெருநாளைப் பாட்டுப்பூசையோடு ஆரம்பித்தார். எமது அன்பிற்கும், நன்றிக்குமுரிய கட்டளைக் குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள். அவரின்கருத்துகள் நிறைவேறவும், ஆன்ம, சரீரநலன்களுக்குமாக பக்திஉருக்கத்துடன் வேண்டிக்கொண்டனர் யாவரும்.

பூசையின்பின் அர்ச். சவேரியார் சேவாசங்கத்தினரும், அர்ச். வியாகுலமாதா பக்திச்சபையினரும் குரவர் அவர்கட்கு மாலைகள்சூட்டி, அன்பளிப்புகள்அளித்து, சொற்பொழிவுகள் நிகழ்த்தி ஆசியும், மிட்டாய்களும் பெற்றுமகிழ்ந்தனர்.

8மணிக்கு எமதுபங்கிலுள்ள கிளென்னி ஆண், பெண்பாடசாலையினர் அலங்காரமுற்றுவிளங்கிய குருமனையில் ஒன்றுகூடினர். நாதசுரவாத்திய மிசைக்கப் பலத்தகரகோஷங்களிடையே பெண்கள்கழகத் தலைமைஆசிரியை திருமதி ஈ. ஏ. நாதன்அவர்கள் விழாநாயகருக்கு மாலைசூட்டினர். பின்னர் மாணவர்மாணவிகள் ஆசிரியர்ஆசிரியைகள் அணிவகுத்துமுன்செல்ல, இருபாடசாலைகளினதும் அதிபர்கள்நடுவே விழாநாயகர் ஆண்பாடசாலை மண்டபத்தைநோக்கி அழைத்துச்செல்லப் பெற்ருர். அங்கு பாடசாலைமுன்பாக வழமையானவைபவங்களோடு குரவர் அவர்களால் பாடசாலைகளின்கொடி ஏற்றிவைக்கப்பட, பாடசாலைக்கீதம் படிக்கப்பட்டது.

அதன்மேல்யாவரும் அலங்காரகோலமுற்றிருந்த ஆண்பாடசாலை மண்டபஞ்சென்றதும் பெண்பாடசாலையினரால் தமிழிலும், ஆண்பாடசாலையினரால் ஆங்கிலத்திலும் வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பெற்றன. பின்னர் இருபாடசாலைகளினதும் ஆசிரியர்கள்சார்பில் திருமதி எம். ரி. பிரான்சீஸ்ஆசிரியையால் சுவாமிகளுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டபின் ஆண்பாடசாலை ஆசிரியை திருமதி. எ. பொன்னுத்துரை, பெண்பாடசாலைஆசிரியை திருமதி. எல். ஞானப்பிரகாசம் என்பவர்கள் சுவாமிகளின் சேவைகள்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பெண்பாடசாலைத் தலைமைஆசிரியைஎழுந்து, சுவாமியவர்கள் தங்களிடையே நான்குஆண்டுகள் நலம்பெறப்புரிந்த தொண்டினைமுன்னிறுத்திப் பங்கிலுள்ளபெரியோர், சிறியோர்யாவரும் அவரை "எங்கள்சுவாமி" எனஉரிமைபாராட்டி அழைக்கும்விதத்தினை விளக்கிக் கூறினர். அகிலஇலங்கைத் தமிழாசிரியர்சங்க தலைவரும், ஆசிரியமணியும், ஆண்கள்கழகத் தலைமைஆசிரியருமான திரு. கே. எல். இராசேந்திரம் அவர்கள் சுவாமியவர்கள்மீது எழுதிய பாடலைப்படித்துப் பலவாறு புகழுரை கூறினர். சுவாமியவர்கள் எழுந்து தமக்குச் செய்த சகலவைபவங்கட்குமாக நன்றியும், பலபுத்திமதிகளும் கூறி ஆசியளித்து, யாவர்க்கும் மிட்டாய்கள் வழங்கினுர். இவ்வைபவ விசேஷஅம்சங்கள் பிரதிமைப்படங்களாகப் பிடிக்கப்பெற்றன. தேசியகீதத்துடன் இவ்விழாமுடிவடைந்தது.

**விளையாட்டுப்போட்டி :**

விழாநாயகரைக் கௌரவிக்குமுகமாக இல்ல விளையாட்டுப்போட்டிகள், அன்றுபிற்பகல் "வம்பேக் பசுந்திட"லில் நடைபெற்றன. அழைப்புக்கிணங்கிப் பெற்ருர், பெரியோர், உற்ருர்எனப் பெருந்திரளானேர் கூடியிருந்தனர். கிழக்குஇலங்கைக் கத்தோலிக்கபாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் வண. ஈ. கிறவுதர் சுவாமியவர்கள் திடலைஅடைந்ததும் இருஇல்லங்களினதும் வர்ணஉடைஅணிந்த இருமாணவிகள் மஞ்சள், நீலவர்ண மாலைகள்சூட்டி அவரைவரவேற்றனர். கட்டளைக்குரவருக்கு மாலைகள் சூட்டப்பெற்றதும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. 33விளையாட்டுப்போட்டிகள் கிரமந்தவருது விமரிசையாகநடந்தன. இருபாடசாலைகளினதும் பழையமாணவர், மாணவிகளுக்கும், இருபாடசாலைகளிலும் கடமையாற்றிய, ஆற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், சந்திப்பாளர், உத்தியோகஸ்தர்களுக்கும் ஒழுங்குசெய்யப்பெற்ற விளையாட்டுகள் கவர்ச்சிகரமாகநடந்தேறின. வெற்றிபெற்ருேர்க்கு வண. ஈ. கிறவுதர்சுவாமியவர்கள் பரிசில்களைவழங்கினுர். மஞ்சள் வர்ண "இக்கினேசியஸ்" இல்லம் 116 புள்ளிகளைப்பெற்று வெற்றிக்கிண்ணத்தைசூட்டியது. பங்குக்கிறீஸ்துவர்களும் தனித்தும், குடும்பமாகவும் சுவாமியவர்களைச்சந்தித்து வாழ்த்துக்கூறி, அன்பளிப்புகள்அளித்து, இன்னுரையாடி ஆசிபெற்றுமீண்டனர். இப்பங்கிலுள்ள மாசில்லாமாதா பக்திச்சபையினரும், பூசைப்பரிசாரகர் சபையினரும் தனித்தனியே குரவர்அவர்களைச் சந்தித்து, வாழ்த்துப்பாக்கள்பாடி, அன்பளிப்புகள்அளித்து ஆசீரும், மிட்டாய்களும் பெற்றுமகிழ்ந்தனர்.

இப்பங்கிலுள்ள வயோதிபர்தாபன நிர்வாக கன்னியர்கள் சுவாமியவர்களைத் தமதுதாபனத்தில் வரவேற்று உபசரணைகள்நடாத்திப் பூசைவஸ்திரமும், அதைச்சார்ந்தபொருட்களும் அன்பளிப்பாகவழங்கினுர்கள். சுபம்!

—நிருபர்.




### நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்நேறியாவாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினுல் ஏற்படும்ரோகங்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே
எமது சேவையின் இலட்சியம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 668

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின்
1627-ம்தத்தவ வழக்கில்
காலஞ்சென்றுபோன பத்மநாதன் பெண் ராசலெட்சுமியின் தத்துவகாரன்
கோப்பாய்தெற்கு
கந்தையா பத்மநாதன்

— வழக்காளி.

எதிராக
கொக்குவில் கிழக்கு
கதிரவேலு நவரெட்டினம் —எதிராளி.
காலஞ்சென்றுபோன எதிராளியின் ஆதனப்பிரதி, கொக்குவில் கதிரவேலு சின்னத்துரை — பதில்எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 668-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1958-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 27-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 895-ம், இன்னும் ரூபா600-க்கு 23-11-55 தொடக்கம், 24-1-58வரையும் 100-க்குப் 10%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 147 ரூபா 23சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோயிற்பற்று கொக்குவில்இறை, 'முல்லைக்கட்டையடி' பர. நில. இலா இரண்டேமுக்காலும் (பர. நில. இலா. 2¾), இதில் மேற்குப் புறமாக அறுதிவித்த பர. நில. இலா, ஒன்றும் எட்டில்மூன்றும் (பர. நில. இலா. 1⅜) நீக்கி மிகுதியாயுள்ள பர. நில. இலா. 1⅜ (பர. நில. இலா. ஒன்றும் எட்டில்மூன்றும்), கிணறும், பயிர்களும். எல்லை: கிழக்கும், வடக்கும் — ஒழுங்கை. மேற்கு — கதிரவேலு சின்னத்துரையும், பெண் கனகம்மாவுமுடைய ஆதனம். தெற்கு — செல்லையா கணேசமூர்த்தி பெண் பத்மாவதியுடைய ஆதனம். இதற்குள்இருக்கும் மேற்கெல்லைக் காணிக்குரிய பங்கும், வடக்கெல்லைஓரமாக வழிவாய்க்கால் உரித்தும் புறநீங்கலாக மிகுதிஅடங்கலும்.

**தி. ந. ஆசீர்வாதம்,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
21, இரண்டாம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். 16—10—58

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 1174

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

ஊரெழு
நடராசா கைம்பெண் கண்மணியம்மா

— வழக்காளி.

எதிராக
வண்ணார்பண்ணை மேற்கு
1. சிவலிங்கம் அருமைநாயகமும்
2. பெண் மங்கையற்கரசியும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1174-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம்ஆண்டு மார்கழிமாதம் 9-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 9,235-உம், இன்னும் ரூபா 8,000-த்திற்கும் 23-8-56 தொடக்கம், 23-5-58 வரையும் 100-க்குப் 12%வட்டியும், இன்னும் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 380ரூபா 26சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கு இறை ஒட்டைபுளியடி பர. நில. இலா. 1 குளி3½யும், செய்பயிர், வான்பயிர்களும், கிணறும், புதுக்கல்வீடும். எல்லை: கிழக்கு — செல்லையா நடராசாவுக்கும், பெண் சிவகங்கைக்கும் உரிய ஆதனம். வடக்கு — அப்துல்காதர் பெண் சுல்தான் மூகிதீன் நாச்சியாவின் ஆதனம். மேற்கு — குமாரு பெண் முத்தாச்சியின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை. இதுஅடங்கலும்.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 21-10-58

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாய மாதாவின் அனுக்கிரகத்தை இரந்து மன்ருடிவந்ததன் பலனுய் நடக்க இயலாதிருந்த எனதுகுழந்தை தற்போது நடமாடி வருவதாலும், அத்துடன் வேறு வருத்தங்கள் குணமாகி வருவதாலும் நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கிறேன். இன்னும் பூரண சுகம்பெறத் தயைசெய்யுமாறும் வேண்டுகிறேன்.

யாழ்ப்பாணம் அ. இருதயம்

* * *

### நன்றித்துதி

பரிசுத்த சதாசகாயமாதாவிடம் நான் முழுநம்பிக்கையுடன் கேட்டவரத்தை அடைந்துகொண்டேன். தாயே உமக்கு எனதுநன்றி. மேலும், நான்கேட்கும் வரங்களைப் பெற்றுத்தருவீர்என்று நம்பிக்கையுடன் உம்மை இரந்துவேண்டுகிறேன். நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

ஜே. டபிள்யு.
ஊர்காவற்றுறை.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 23-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org